[illegible]

[illegible]

14 Jan 1924

3L

[illegible]211, N15AB

N124·9·7

187459

உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 9	ருத்ரோத்காரி௵ தைமீ கஉ 1924௵ ஜனவரிமீ 14உ	பகுதி 7

கடவுள் வணக்கம்.

பாராதி ககனப் பரப்புமுண் டோவென்று
படர்வெளிய தாகி யெழுநாப்
பரிதிமதி காணுச் சுயஞ்சோதி யாயண்ட
பகிரண்ட வுயிரை வைக்கும்
நேராக வறிவா யகண்டமா யேகமாய்
நித்தமாய் நிர்த்தொந் தமாய்
நிர்க்குண விலாசமாய் வாக்குமன மணுகாத
நிர்மலா னந்தமய மாய்ப்
பேராது நிற்றிநீ சும்மா விருந்துதான்
பேரின்ப மெய்தி டாமல்
பேய்மனதை யண்டியே தாயிலாப் பிள்ளைபோல்
பித்தாக வோமனதை நான்
சாராத படியறிவி னிருவிகற் பாங்கமாஞ்
சாசுவத நிஷ்டை யருளாய்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே. (1)

நீயற்ற வர்கிலையே நிட்டையதி னீயிலையோ
வாயற் றவனே மயங்காதே — போயற்
றிருந்தாலு நீபோகா யென்றுமுள்ளாய் சும்மா
வருந்தாதே யின்பமுண்டு வா. (2)

பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போ
லாருந் துறக்கை யரிதரிது — நேரே
மனத்துறவு மப்படியே மாணு விவற்றி
னுனக்கிசைந்த வாறென்றே யோர். (3)

7 FEB 19
187459.

அரும்பொருள் விளக்கம்.

1\. பாராதிககனப்பரப்பும் = பிருதிவிமுதல் எல்லை யற்றதாகப் பரந்து தோன்றும் ஆகாயம் ஈறாக உள்ள தூலபஞ்ச பூதங்களும்.

உண்டோ என்று = உண்மையில் இருக்குமோ வென்று சந்தேகிக்குமாறு.

படர்வெளியதாகி = (யாவற்றையும் அதிக்கிரமித்து) வியாபித்துள்ள பரமாகாச வடிவமாகி.

எழுநா = அக்னி. பரிதி = சூரியன். மதி = சந்திரன்.

பரமாகாயம் (சிதாகாயம்) தனக்குமேல் வியாபகமானதொன்றின்றித் தான் சர்வவியாபகமா யிருப்பதால், எல்லையற்ற அந்த அகண்டாகார நிலைமையை நோக்க, இந்தப் பிருதிவியாதி தூலபூதங்கள் அணுவளவாய்க் கூட மதித்தற் கில்லாமையால் அவைகள் 'உண்டோவென்று ஐயுறும்படி' என்றார்.

அக்கினி சூரியன் சந்திரன் மூன்றுக்கும் பிரகாசத்தைத் தந்து, தான் அன்னியப் பிரகாசத்தை யெதிர் பாராமல், சுயம்பிரகாசமா யிருத்தலால் "எழுநாப் பரிதிமதி காணச் சுயஞ்சோதியாய்" என்றார்.

நிர்த்தொந்தமாய் = (எங்கும் அறிவு சொரூபமாய் வியாபித்திருப்பினும்) எப்பொருளோடும் சம்பந்தமின்றி.

நிர்க்குணம் = குணாதீதம்.

வாக்குமன மணுகாத = வாக்கால் இவ்வகைப்பட்டதென்று வரை யறுத்து மொழி யொணாததும், மனதினால் இத்தன்மையதென நினைக் கொணாததுமான

பேராது நிற்றிநீ = நீ சலனமின்றி நிற்கின்றாய்.

சும்மா இருந்து பேரின்பம் எய்திடாமல் = (நான், மனம் வாக்கு காயம் மூன்றின் செயல்களையு மடக்கி) மௌன நிலையில் நின்று பேரின்ப சுகத்தை யடையாமல்

"சும்மாவிருக்கச் சுகமுதயமாகுமே" என்று இம்மகானே மற்றோரிடத்தில் கூறியருளினார்.

" இறப்பும் பிறப்பும் பொருந்த — எனக்
கெவ்வணம் வந்ததென் றெண்ணியான் பார்க்கில்
மறப்பு நினைப்புமாய் நின்ற — வஞ்ச
மாயா மனத்தால் வளர்ந்தது தோழி — சங்கர......"

என்று இவர் கூறியதுபோல், மனமே பிறவிப்பிணிக்குக் காரணம் — மனதோடு எதுகாறும் சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கிறோமோ, அதுகாறும் பிறவி யொழியாது. மனமே மாயையாதலின், எத்தனை சாத்திரங்

கள் வாசித்தாலும், எத்தனை வித்தைகளைக் கற்றாலும் மனதை யடக்கக் கல்லாவிடின் ஞானோதய முண்டாகாது. பேரின்பம் கிடைக்காது.

" சினமிறக்கக் கற்றாலுஞ் சித்தி யெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே"

என்றனர் தாயுமானவரே.

இம்மனம் சதா சலித்துக்கொண்டு குழப்பத்தை யுண்டாக்கி ஞானமடைதற்குத் தடையா யிருப்பதால் "பேய்மனதை யண்டியே தாயிலாப் பிள்ளைபோல் பித்தாகவோ" என்றார்.

மனம் மகா கொடிது. கொஞ்சத்தில் அடக்கொணாதது. இதனால் இம்மனதை யான்றோர்கள் பேய் என்றும், நாய் என்றும், குரங்கென்றும் இன்னும் பலவாறாகவும் கூறி யிருக்கிறார்கள். பிரபஞ்சம் இதன் நினைவிலிருந்தே தோன்றுகிறது. இது நினைத்தால் உலகுண்டு, நினையாவிட்டால் இல்லை. இது யாதினும் வன்மையுடையது.

" கடுமனவன் பேய்கனலிற் கொடிதாகு
மலைகளினுங் கடத்தற் கொண்ணா
நெடுவயிரத் தினும்வலிது கடல்பருகி
மேருவினை நேரே பேர்த்துச்
சுடுகனலை விழுங்கினு நிறுத்தரிது
புலன்முழுதுந் தோன்று மூலங்
கெடுமுலகீ துண்டெனிலுண் டிலதாகி
லிலதிதனைக் கெடுத்தல் வேண்டும் "

(வாசிட்டம் - வைராக்கியப் பிரகரணம்.)

(இதன் பொருள்) வலிமை பொருந்திய கொடிய மனமாகிய பேய் தீயினும் கெட்டதாகும். மலைகளைக்காட்டிலும் கடத்தற்குக் கஷ்டமானது வயிரத்திலும் கடினமானது. அலைகடலையே விழுங்கிவிட்டு, மகம்மேரு மலையை அடியோடு பேர்த்தெறிந்து, கொழுந்துவிட்டெரியும் அனலையே விழுங்கினாலும் விழுங்கலாம்; இம்மனதை நிறுத்துவதரிது. இதுவே மற்ற புலன்கள் முதலிய யாவும் தோன்றுவதற்கு மூலமாகும். அழிவுடைய இவ்வுலகம் இம்மனம் உண்டென்றால் உண்டு, இது இல்லையென்றால் இல்லை. இத்தகைய மனதை யழித்துவிட வேண்டும்.

அறிவின் நிருவிகற்பாங்கமாம் சாசுவத நிஷ்டை யருள்வாய் = அறிவுமயமாயிருக்கும் அழியாத நிருவிகற்ப நிஷ்டையை யருளிச் செய்யவேண்டும்.

'சச்சிதானந்தம்' என்பது சிவத்தின் சொரூபம். (சத்து + சித்து + ஆனந்தம்.)

சத்து = முக்காலும் உள்ளது. அழியாதது.

சித்து = சுயம்பிரகாசமுடையதாய், தான்வேறு பிரகாசத்தை விரும்பாமல் யாவற்றையும் பிரகாசிக்கச் செய்வது.

ஆனந்தம் = துக்கமற்றது.

நீயற்ற அந்நிலை = நான் என்றதற்போதம் ஒழிந்த நிலை. இந்த நிலையே பட்டினத்தடிகள் "செத்தாரைப்போலேதிரி" என்றதும், மணிவாசகப் பெருமான் "அப்பா! செத்தே போயினேன்" என்றது மாகிய நிலை.

போய் அற்று இருந்தாலும் = அந்நிலையிற் சென்று தற்போதம் ஒழிந்து இருந்தாலும்

நீ போகாய் = ஆன்மாவாகிய நீ போய்விடமாட்டாய்.

என்று முளாய் = நீ என்றைக்கும் அழியாதிருக்கும் நித்தியப்பொருள்.

"தற்போத மொழிந்த விடத்தில்தான் ஆனந்த முண்டாதலின் அங்கு நாம் அடியோடு இல்லாமற் போய்விடுவோமோ வென்று அஞ்சாதே, நீ என்றைக்குமுள்ள நித்தியன். பேசாமல் அந்த நிலையை யடைய வருதி" என்பதாம். 'தற்போதம்' என்பது நான் என்ற தடிப்பு; இது உள்ளவரை அத்துவிதம் சித்திக்காது. 'நான்' என்ற தன்மை யுணர்ச்சி யுளதேல் மூன்னிலையும் ஒன்றுளதாகும்.

இம்மகானே,

"நானென்னு மோரகந்தை யெவர்க்கும் வந்து
 நலிந்தவுடன் சகமாயை நானு வாகித்
தான்வந்து தொடருமித்தால் வளருந் துன்பச்
 சாகரத்தின் பெருமை யெவர் சாற்ற வல்லார்
* * * * * * "

என்றும்,

" ஞானகா ரத்தினொடு ஞேய மற்ற
 ஞாதுருவு நழுவாம னழுவி நிற்கும் "

என்றும் அருளியுள்ளார்.

3. பாரனைத்தும் = உலக போகங்களனைத்தும். பொய்யெனவே = கானல் நீரைப்போலும், கனாத்தோற்றம்போலும் உண்மை யல்லவென்றுணர்ந்து. பட்டினத்துப்பிள்ளை = காவிரிப்பூம்பட்டினத்தில் அவதரித்த பட்டினத்துப்பிள்ளை என்ற திருவெண்காட்டடிகள்.

நேரே மனத்துறவும் அப்படியே = நேராக அகத்துறவடைந்தோர் மார்க்கமும் அதுவே.

இவற்றில் உனக்கிசைந்த ஆறு ஒன்றே ஓர் = அகத்துறவு புறத்துறவு என்ற இரண்டனுள் உனக்குப் பொருத்தமாகிய மார்க்கம் ஒன்றே. அதை ஆராய்ந்து கொள்.

உலகில் செல்வமின்றி வறுமையை யனுபவித்துக்கொண் டிருக்கும் ஒருவன் உலகை வெறுத்துப் புறத்துறவடைவது சுலபம். திருவெண்காடர்க்கு அரசன் பொருமை கொள்ளும் அளவிறந்த செல்வமும், வனப்புடைய கற்பரசியாகிய மனைவியும், தாயும், சகல பேர்பாக்கியங்களு

மிருந்தும், உடை கோவணமாகவும், உறங்குவது புறந்திண்ணையாகவும் உணவு கையேற்றுண்பதாகவும் துணிந்து முற்றத்துறந்த மகானாதலின், அவரைப்போல் துறவடைதல் யார்க்கும் அரிது என்றனர்.

துறவு, புறத்துறவென்றும், அகத்துறவென்றும் இருவகைப்படும். புறத்துறவு என்பது உயிர்ச் சார்பு, பொருட் சார்பாகிய இருவகைப் பற்றுக்களையும் விட்டு நீங்குதல். இவற்றில் உயிர்ச்சார்பு "பெற்றோர், மனைவி மக்கள், சுற்றத்தார் முதலிய ஜீவர்கள். பொருட்சார்பு என்பது வீடு, பூமி, பொன் முதலியவைகளாம்.

இந்த இருவகைச் சார்பையும் விட்டு நீங்குதல் புறத்துறவு.

அகத்துறவு என்பது இவ்வுலகபோக பாக்கியங்களும், தேவலோகாதி போகங்களும் யாவும் அநித்தியமென உணர்ந்து இவற்றின் ஆசையை யடியோ டொழித்தல்.

புறத்தில் யாவற்றையும் விட்டு நீங்கி உள்ளத்தில் அவற்றின் இச்சை நீங்காதிருந்தால் அத்துறவால் பயனில்லை. புறத்தில் ஒன்றையும் விடாமல் ஒருவன் அகத்துறவடைந்திருப்பானாயின், அவன் தாமரையிலைநீர் போல் ஜகத்தொடுகூடி யிருப்பினும் ஞானமடைவான். ஆகையால் அகத்துறவே சிரேட்டமானது. அதுவே ஞானத்தை யளிக்கும். புறத்துறவு ஒருவனுக்குப் பலகாரணங்களால் நேரிடலாகும். அவன் வெளிக்குச் சந்நியாசிபோல் தோன்றினும் மனதில் பற்றற்றவனாகான். விரிக்கிற் பெருகும்.

ஆனந்தபோதினி

உருத்ரோத்காரி௵ தைமீ௴ ௯

விளம்பர வித்தை.

'விளம்பரம்' என்றால் ஒரு விஷயத்தைப்பற்றிப் பலர்க்கும் அறிவிப்பது என்பது பொருள். இங்கு நாம் கூறுவது வர்த்தகர்கள் தங்களிடமுள்ள சரக்குகளைப்பற்றிச் செய்யும் விளம்பரமேயாகும். வர்த்தகர்க்கு விளம்பரம் இன்றியமையாதது. விளம்பரத்தின் மூலமாக வர்த்தகர் தங்களிடமுள்ள பொருள்கள் இன்னின்னவை யென்று தங்கள் நாட்டார்க்கு மட்டுமல்ல, அன்னிய நாடுகளிலுள்ள ஜனங்களுக்கும் அறிவிக்கிறார்கள். எவ்வள

வுக்கெவ்வளவு அதிகமாகப் பல வழிகளில் விளம்பரம் செய்கிறார்களோ, அவ்வளவுக் கவ்வளவு அதிகமாய் அவர்கள் வியாபாரம் நடைபெறுகிறது.

விளம்பரம் செய்வதிலும் ஒருவித ஒழுங்கும் சாமார்த்தியமும் வேண்டியிருக்கிறது. விளம்பரமும் ஒரு வித்தையே யெனலாம். அந்த வித்தையில் மேல்நாட்டார் மிகக் கைதேர்ந்தவர்கள். மேல்நாட்டு வர்த்தகர்கள் விளம்பரத்திற்குப் பெருந்தொகையான பணத்தைத் தாராளமாகவும் நம்பிக்கையோடும் செலவுசெய்கிறார்கள். உலகிலுள்ள முதன்மையான செல்வவந்தர்க ளனைவரும் வியாபாரிகளே யாவர்.

நமது நாட்டார், மேல்நாட்டாருடைய நாகரீக ஆசாரங்களைப் பின்பற்ற முயல்வதுபோல், இதிலும் அவர்களைப்போல் நடிக்க முயல்கிறார்கள். ஆனால் எவ்வளவு வரையில் இதில் நன்மையான மார்க்கத்தில் செல்கிறார்கள் என்று பார்ப்போம்.

விளம்பரம் செய்வதன் நோக்கம்:—

1. ஒருவன் தான் வர்த்தகனென்றும், தன் இருப்பிடம் இன்னதென்றும், தன்னிடமுள்ள சரக்குகள் இன்னின்னவையென்றும்,

2. தன் சரக்குகளின் குணங்கள் இப்படிப்பட்டவையென்றும், விலை முதலியவைகளையும் யாவர்க்கும் அறிவிப்பதேயாகும்.

இப்படி யறிவிப்பதில் தன்னிடமுள்ள சரக்கு மேன்மையானதென்றும், விலையிலும், சரசமானதென்றும், தன்னிடமுள்ளவற்றை வாங்குவது அனுகூலமென்றும் விளம்பரத்தை வாசிப்போர் மனதிற் படும்படி செய்வதே விளம்பரம் எழுதுவதன் சாமர்த்தியமாகும். விளம்பரத்தின் தலையங்கமும் முக்கிய அம்சங்களும் காண்போர் கண்களை யுடனே கவரும் வண்ணம் பெரிய எழுத்துக்களில் அச்சியற்றப்பட வேண்டும். அதோடு படங்கள் (தகுதியான உருவங்கள்) அமைப்பது அதிக கவர்ச்சியை யுண்டாக்கும் என்று அந்த வித்தையில் தேர்ந்தவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

விளம்பரம் எழுதுவதிலும் தந்திரமும் புத்திசாதுரியமும் உபயோகிக்கப் படுகின்றன. நேரே சரக்கின் பெயரைக் கூறாமல் இருவர் சம்பாஷிப்பது போலும் ஒருவரையொருவர் கேட்டறிவது போலும், ஒருவர்க்கு மற்றவர் சிபாரிசு செய்வதுபோலும்,

இப்படிப் பல விதமாய் எழுதி, முடிவில் சரக்கின்பெயர் கிரயம் முதலியவைகளை வரைகிறார்கள். ஒரு பத்திரிகையில் ஒரு விளம்பரத்தை மட்டும் தலைகீழாகத் திருப்பிப் பிரசுரம் செய்வதும் ஒரு விதத் தந்திரம். அப்படிச் செய்வதால் பத்திரிகை வாசிப்போர் இதென்னவென்று வியப்போடு பத்திரிகையைத் திருப்பி அந்த விளம்பரத்தை யவசியம் வாசிப்பார்கள்.

இக்காலத்தில் வெளிவரும் மேல் நாட்டு வர்த்தகர்களின் விளம்பரங்களையும் நம் நாட்டு வியாபாரிகளின் விளம்பரங்களையும் கவனித்தால் நாம் சுருக்கமாய்க் கூறிய விஷயங்கள் நன்கு விளங்கும். இவையொரு பக்க மிருக்க, இக்காலத்து விளம்பரங்களில் உண்மையும், நம்பிக்கையும் எவ்வளவு வரையில் அடங்கி யிருக்கின்றன என்பதைக் கவனிப்போம்.

உலகில் தன்னிடமுள்ள குற்றம் குறைகளை ஒளிக்காமல் வெளியிடும் சுபாவ முடையவர்களைக் காண்பது மிக அரிதே. ஆனால் அத்தகையோர் இல்லாமலுமில்லை. வர்த்தகரிலேயே சிலர் தங்களிடம் இருக்கும் ஒரு சரக்கை யொருவர் வாங்கவந்து, அய்யா! இது புதிதா பழையதா என்று கேட்டால், பழையதாயின், பழைய சரக்குதான் என்று உண்மையைக் கூறி விடுகிறார்கள். ஜவுளி வியாபாரிகளிலும் 'இந்தச் சேலை சாயம் கெட்டிச் சாயமல்ல' என்று உண்மையைக் கூறிவிடுகிறவர்கள் இருக்கிறார்கள். இவர்களிடம் ஜனங்களுக்கு நம்பிக்கையும் நன்மதிப்பும் உண்டாகின்றன. இவர்கட்கு நல்ல கீர்த்தியும் கிடைக்கிறது.

ஒரு வர்த்தகன் ஒரு சாக்கை வாங்கியபின் அதைத் தன்னிடம் கொண்டுவர நேரிட்ட வண்டிசத்தம் அல்லது கூலி, அதை விளம்பரம் செய்த கூலி, கடைவாடகை, குமஸ்தாக்கள் சம்பளம், மற்ற சில்லரைச்செலவு, தன் முதலுக்கு வட்டி அதாவது தனக்கு வருமானம், இவையாவும் அச்சரக்கின் கொள் முதலோடு சேர்த்தே விற்க வேண்டும். ஒரு சமயம் தான் வாங்கிவந்த சரக்கு பிறகு விலைகுறைந்ததாகி விடலாம். அப்போது இவனுக்கு நஷ்டம் நேர்ந்தேதீரும். அவற்றை யெல்லாம் அவன் மற்ற சரக்குகளின் இலாபத்திலேயே சரிப்படுத்த வேண்டும். ஆகையால் ஒரு வர்த்தகன் ஒரு சரக்கை யதிக இலாபத்திற்கு விற்பதால் அவன் மேல் குறைகூற இடமில்லை. அது அநீதியுமாகாது. அப்படியவன் அளவு மீறி யதிக இலாபம்வைத்து விற்கவும்

முடியாது. ஏனெனில் மற்ற வர்த்தகர்கள் புளி வீசை 4 அணுவென்று விற்கும் போது, ஒருவன் மட்டும் 6 அணு என்றால் யார் வாங்குவார்கள்? சாதாரணமாக மேல் நாட்டார் வைத்துக் கொள்ளும் இலாபம் நம் நாட்டு வர்த்தகர்கள் வைத்துக்கொள்ளத் துணியார்கள். அய்யோ! இது பெரும்பாதகம். தெய்வத்திற்கும் பொறுக்காது என்று எண்ணி அஞ்சுவார்கள்.

மேல் நாட்டார் அமெரிகாவிலிருந்து ஒரு புதுவிதமான சாமான் வரவழைத்தார்கள் என்று வைத்துக்கொள்வோம். அதன் கொள் கிரயம், கப்பல் கூலி, சுங்கம், வண்டிச்செலவு யாவும் சேர்ந்து சாமான் 1-க்கு 7 ரூபா யாகிறதென்று வைத்துக்கொள்வோம்: இதற்கு எவ்வளவு இலாபம் சேர்க்கலாம், அதாவது விற்கும் விலை என்ன ஏற்படுத்தலாம் என்று யோசிக்கும்போது, அவர்கள் கவனிப்பது இரண்டே விஷயங்கள். ஒன்று, இதே சரக்கு நமது நாட்டில் வேறு வர்த்தகர்கள் வரவழைத்திருக்கிறார்களா? இரண்டாவது, இக்காலத்தில் இது யாவர்க்கும் வேண்டுவது தானா? என்பவைகளே. அச் சரக்கை வேறு யாரும் வரவழைக்கவில்லை யென்றும், அது இச்சமயம் யாவர்க்கும் வேண்டியதென்றும் தெரிந்தால் 15 ரூபாய் விலை வைக்கச் சற்றும் பின்னிடையார்கள். இது நாம் அனுபவமாகக் கண்ட சங்கதி. ஆயினும் மற்ற விஷயங்களில் அவர்களிடம் ஒருவித ஒழுங்கும், நாணயமும், தம் தொழிலில் சீர்திருத்தமும் இருக்கின்றன. அவர்கள் தங்கள் விளம்பரங்களைப் பகட்டாய்ச் செய்து ஜனங்களின் மனதை வசீகரிக்கும்படி பிரசுரிக்கிறார்கள். அவ் விளம்பரங்களைப் பார்க்கும்போது "அப்பா! விளம்பரமே இவ்வளவு செலவிட்டுச் செய்திருக்கும்போது, இவர்கள் பெருத்த வியாபாரம் செய்பவர்களாகவும் இருக்கவேண்டும்" என்று வாசிப்போர் மனதிற்குப் புலப்படுகிறது. அவர்களும் தங்கள் சரக்குகளின் குணங்களைப்பற்றி சிலாகித்து எழுதினாலும் பச்சையாய் அடியோடில்லாததைப் புளுகமாட்டார்கள். தங்கள்மேல் குற்றங்கூற இடம் கொடாமலும், கூடியவரையில் நாணயத்திற்குப் பழுதுவராமலும் கவனிப்பார்கள்.

இப்போது மேல் நாட்டாரைப் பார்த்து வெளி வேடங்களில் மட்டும் அவர்களைப் பின்பற்ற முயலும் நம் நாட்டார்கள் இவ் விஷயத்தில் எப்படி நடந்துகொள்ளுகிறார்கள் என்று பார்ப்போம். பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் அனுப்பப்படின் பத்திரிகையின் காரியஸ்தர்கள் விளம்பர விகிதம் பெற்று விளம்பரத்தைப் பிரசுரித்து விடுகிறார்கள். அவ் விளம்பரத்தில் கூறப்பட்டிருக்கும் சரக்கின் குணங்களைப்பற்றிய உண்மை யவர்களுக்குத் தெரியாது. ஆதலின் அதற்கு அவர்கள் பொறுப்பாளிகளல்லர். சில விளம்பரங்கள், பார்க்கும்போதே ஜனங்களை மோசம் செய்யத் தக்கவையென்றும் ஏமாற்றமுடையவை யென்றும் புலப்படலாகும். அத்தகைய விளம்பரங்களைப் பொது நலத்தைக் கவனிக்கவேண்டிய பத்திரிகைக் காரியஸ்தர்கள் தம் பத்திரிகைகளில் வெளியிடலாகாது. ஆனால் சிலர் விளம்பர விகிதம் ஒன்றை மட்டுமே கவனித்து, எந்த விளம்பரமாயினும் சரி என்று பிரசுரித்து விடுகிறார்கள். இதனால் அப் பத்திரிகையில் வரும் விளம்பரங்களை யுண்மையென மதிக்கலாகாதென்று ஜனங்கள் கருத நேர்கிறது.

இப்போது நம் நாட்டில் வெளிவரும் பெரும்பாலான விளம்பரங்கள் உண்மையைக் கவனித்து எழுதப்படுபவையல்லவென்றே யாவரும் கருதுகிறார்கள். ஏனெனில், வர்த்தகன் தன் சரக்கின் நற்குணங்களைப்பற்றிக் கூறவேண்டியது அவசியமே. ஆனால் அச் சரக்கில் அடியோடில்லாத குணத்தைக் கற்பிப்பதும், சாதாரணமாய் இரண்டொரு கடைச் சரக்குகள் சேர்த்து தயாரிக்கப்பட்ட ஒரு ஔஷதத்தை "அநேக வன மூலிகைகளும் விலை யுயர்ந்த சரக்குகளும் சேர்த்து மிகப்பிரயாசையோடு செய்யப்பட்டது" என்று கூறுவதும், கடையில் விற்கப்படும் மேல்நாட்டு இரசாயன மருந்தை "இது ஒரு பெரிய மகானால் கண்டு பிடிக்கப்பட்ட முறைப்படி இமயமலையிலிருக்கும் மூலிகைகளால் செய்யப்பட்டது" என்று எழுதுவதும், அளவுமீறிப் புகழ்வதும், விளம்பரத்தின் மதிப்பை யடியோடு கெடுத்து அந்த வர்த்தகனையும் பொய்யனாக்கி விடுகிறது.

இதோடு இக்காலத்தில் வர்த்தகர்கள் தாம் விளம்பரம் செய்யும் சரக்கு, நம் நாட்டிற்கு நன்மை பயக்கத்தக்கதா அல்லவா என்பதை யடியோடு கவனிப்பதில்லை. "கள்ளுவிற்றுக் கலப்பணம் சம்பாதிப்பதினும் கற்பூரம் விற்றுக் கால்பணம் சம்பாதிப்பது நலம்" என்ற பழமொழியை யடியோடு அவமதித்து, இலாபம் ஒன்றையே கருதி, சுத்த ஆபாசமானவையும் யோக்யதைக்கு

மாறுணவையுமான வஸ்துக்களைப் பற்றியும் மனம் கூசாமல் விளம்பரம் செய்கிறார்கள். இவற்றால் இக்காலத்தில் விளம்பரங்களில் கூறியிருப்பவைகளில் ஜனங்களுக்கு நம்பிக்கையில்லை. இதனால் விளம்பரச் செலவு வீண்செலவாவதோடு வர்த்தகரிடம் நம்பிக்கைக்குறைவு ஏற்படுகிறது. நம் நாட்டு வர்த்தகர்கள் இத்தகைய குறைகளையும் தவறுகளையும் நிவர்த்திசெய்ய வேண்டியது அவர்களின் நன்மைக்கு இன்றியமையாததாகும்.

ஓம் தத்ஸத்.

சகோதரத்வ பாவனை.

இந்திய மக்கள் எவரும் ஒருமித்த
சிந்தைய ராகிச் சிநேகித்துச் — சந்ததமும்
சோதரத்வம் பாராட்டின் துன்பமின்றி வாழ்வரென
ஆதரத்தோ டோதுமறை யாய்ந்து.

சகோதரத்வ பாவனை என்பது, ஆறறிவிற் குரிய மக்களனைவரும், வித்தியாச நோக்கமின்றி, எவ்விஷயத்திலும், ஒன்றிய மனமுடையவராய்க் கூடி வாழுந்தன்மையை வெளிப்படுத்த வல்லதோ ரறிகுறியாம். இப்பாவனை ஒவ்வொரு குடும்பத்திலும் அவரவர்க்கு இளமையிலிருந்தே பெரும்பான்மையும் பயிற்றுவிக்கப் பெற்று வருவதொன்று. அன்பு, அருள், ஈவு, இரக்கம் முதலிய சுகுணங்களின் அபிவிருத்திக்கு இந்தப் பாவனை மூலதனமாகின்றது. பகுத்தறிவை எச்சரிக்க வல்லது. ஐக்கியப் பாட்டைப் பசுமரத்தாணிபோ லாக்கத்தக்கது. இராஜாங்க விசுவாசத்தையும், தெய்வ விசுவாசத்தையும் பலப்படுத்தும் பீடமாவதற்கு யோக்கியம் வாய்ந்தது. தேசாபிமானத்தை வளர்க்குங் கருவி இதுவே. அன்னிய நாட்டாரையும் ஆதரிக்குஞ் சக்தி யிதனிடம் குடிகொண்டுளது. பெரியார் சிறியார் இவர்களிடம் தழுவவேண்டிய முறைமையை யூட்ட அருகமானதும் இச்சகோதரபாவனையே. நல்வழியின் பாற்பட்ட எத்தகைய காரியங்களையும் இதன் வாயிலாக இலேசில் பெற்றுக் கொள்ளலாம். நீதிநூலார்,

“ ஆ தரை மிசைவா ராய யாவரும்
சோதரர் எனமிகத் துன்னல் நன்றென
வேதமே யோதுமேல் விளங்குஞ் சோதரர்
மீதமை நட்பினை விளம்பல் வேண்டுமோ ”

என்று இதனைப் புகழ்ந்திருக்கின்றனர்.

இந்தப் பாவனை கெட்ட வழியிலுங்கூடக் கூடும். ஆறறிவினர்க்கு அதுதழகன்றும். அப்பாவனையும் உண்மைப் பாவனையாகாது. அதுந்றி நாம் சிந்திக்கவேண்டிய தனுவசியமாயினும்,

“ ஊனுடை யெச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு ”

என்று நாயனார் அருளியதைக் கவனிக்கவேண்டும். கவனியாது கைவிடின் அன்னவரை உலகமும் கைவிடும். “இவனென்ன வெட்கங் கெட்டவன்; மானமில்லாதவன் ; மானியன்றோ மனிதன்? இவனிடம் நமக்கென்ன பேச்சு. நாய்குலைத்தா நத்தம் பாழாகப்போகிறது. சீ!

“ தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை ”

எனத் தெய்வப் புலவர் தெரிவிக்கின்றார் என்று சாதாரணமா யுலகம் ஆசார ஈனரைக் கடிந்துரைக்கும் கட்டுரைக்குக் கட்டுப்பட்டாகவேண்டும். ஆதலின் தீயவழியில் இப்பாவனையை நாடாமல் எப்போதும் நல்ல வழியில் நாடுவதே நன்று. சற்சங்கத்தாலல்லவா நன்மை சித்திப்பது. சற்சங்கத்திற்கு இச்சகோதரபாவனையே பெருஞ் சாதனம்.

நமக்கு உறுதியாய சற்சங்கத்தைக் கைகூட்டவல்ல இப்பாவனை நோக்கமொன்றே, நாம் எடுத்த உடம்பை யழகுபடுத்தத்தக்கது. இப்படி உயர்நிலை யடைவதற்கு முக்கிய உதவிக் கருவியாயுள்ள உடம்பை, உள்ளவரையில் அழகுபடுத்தவேண்டுவது நமது கடமையன்றோ? இன்றேல் “ உடன் பிறப்பில்லா உடம்பு பாழ் ” என்பதற்குத் தடையென்ன?

இத்துணைச் சிறப்பினதாய சகோதரத்துவ பாவனையை விரும்புவோரிடம், 1. ஆற்றுதல், 2. போற்றுதல், 3. பண்பு, 4. அன்பு, 5. அறிவு, 6. செறிவு, 7. நிறை, 8. முறை, 9. பொறை என்னும் இரத்தினங்கள் ஒன்பதும் கையிருப்பாய் இருத்தல்வேண்டும். இந் நவமணிகளின் அருமையை ஆசிரியர் நல்லந்துவனார் தமது கலித்தொகை; நெய்தற் கலியில் விசேடித்துப் பேசியுள்ளார். அக்குண விசேஷங்களையும் நாம் அறிந்திருக்கவேண்டும். அவை—

1. “ஆற்றுதல் என்பதொன்றலர்ந்தவர்க் குதவுதல்” அதாவது இல்லறத்தை யொழுங்குபெற நடத்துதலென்று மொழிவது, தரித்திரர்க்கு ஏதாவதொன்றை யுதவுதல்.

2. “போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை”:—ஒன்றைப் பாதுகாத்தலாவது நேசித்தவரை விட்டு நீங்காதிருத்தல்.

3. “பண்பெனப்படுவது பாடறிந் தொழுகுதல்”:—நற்குண நற்செயல் என்று கூறப்படுவது உலக நடையை யுணர்ந்தொழுகுதல். “உலகத்தோடொட்ட வொழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலாதார்” என்பர் செந்நாப் போதார்.

4. “அன்பெனப்படுவது தன்கிளை [illegible]”:— அன்பா[illegible] உறவின் முறையாரை வருத்தாதிருத்த[illegible]

187459

5. "அறிவெனப்படுவது பேதையார் சொல் நோற்றல்":—அறிவாவது அறியாதார் தன்னை நோக்கிக் கூறும் மொழிகளைப் பொறுத்துக் கொள்ளுதல்.

6. "செறிவெனப்படுவது கூறியது மறாமை":— செறிவாவது சொன்ன தொன்மைப் போற்றுதல்.

7. "நிறையெனப்படுவது மறை பிறரறியாமை:"—நிறையாவது மறைந்ததொரு காரியத்தை அயலறியாவாறொழுகுதல்.

8. "முறை யெனப்படுவது கண்ணோடா துயிர்வௌவல்":—முறையாவது நம்மவரென்று தாக்ஷண்ணியம் பாராது அவர் செய்துள்ள குறைக்குத் தக்கபடி அவரது உயிரை வாங்குதல்.

9. "பொறை யெனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்":— பொறையாவது பகைவரைக் காலம் நோக்கிப் பொறுத்திருத்தல்.

இத்தன்மையான குணங்களில்லார் மாட்டுச் சகோதரத்துவ பாவனை பயன்பெறாது. முக்குண வயத்தரான மக்கள் என்றும் பிழைக் குரித்தானவரே. அதுபற்றி அவரை நாம் அறவே வெறுப்பதுகூடாது. சிறு பிழைகள் பொறுக்கத் தக்கனவே யன்றோ? அன்றியும் மழையினிடத்தில் இடியும், மலரினிடத்தில் முள்ளும், சந்திரனிடத்தில் களங்கமும், கனியினிடத்தில் தோலுங் கொட்டையும் இருத்தல் இயல்பாதலின், எவ்வாறு நாம் இக்குறைகளை நோக்காது இவற்றை ஆதரிக்கின்றோமோ அவ்வாறு மக்களையும் ஆதரித்து நல்வழிப்படுத்துவது சகோதரத்துவ பாவனைக்கின்றியமையாத கடனாம். இங்கு இரண்டு உதாரணங் காட்டுவாம்.

தொண்டை நாட்டில், முதிரமலை என்னும் பதியை அரசுபுரிந்து வந்த குமணராஜனைப்பற்றி நாம் பன்முறை படித்தும் கேட்டும் வருகிறோம். புகழொடு தோன்றிய இச்சிற்றரசனை உலகம் மறப்பதுண்டோ? மேற்சொன்ன நற்குணங்கள் யாவும் இவனிடம் பொருந்தியிருந்தன. தமிழறிந்தவன். பரோபகாரம் புரிந்து வருவதே பிறவிப்பயன் என்னும் உத்கிருஷ்ட நோக்கங்கொண்டவன். கற்றாரைக் காதலிப்பவன். இன்ன புவிராஜனைக் கவிராஜரான பெருந்தலைச் சாத்தனார் காணவேண்டிச் சென்றார். சென்றவர், சிம்மாதனத்தில் குமணனுக்குப் பதிலாக அவன் தம்பி இளங்குமணன் வீற்றிருக்கக்கண்டார். விசாரணையில், குமணனுடைய உதாரகுணத்தைச் சகியாத இளங்குமணன் கலைபுற்றிருந்ததைக் கண்ணுற்றுக் குமணன் இராஜ்ஜியத்தைத் தன் பின்னவன் வசமே விட்டுவிட்டுத் தானெங்கோ மறைந்திருப்பதாகவும், இராஜ்ஜியம் தன் வசமா[illegible] இளங்குமணன், "இதுதான் தக்க சமயம். காற்றுள்ள [illegible]வேண்டும். அண்ணனுள்ளவரையில் தனக் [illegible]" என்று எண்ணி[illegible] எனது அண்ணன் சிரத்தைக்கொண்டு [illegible]வர்க்குப் பொ[illegible]கோ[illegible]ளிக்கப்படும்" என்று விளம்பரப்படுத்தி

யிருப்பதாகவும், இவ்வநீதத்தை ஜனங்கள் வெறுத்திருப்பதாகவுங் கேள்வியுற்றார். மனம் வருந்தினார். தமர்க்கிடர் கண்டபோது கறவையும் கன்றும் போலாதலன்றோ கற்றோர்நியதி. உடனே அங்கு நின்றும் வெளியேறினார்.

வெளியேறிய பெருந்தலைச் சாத்தனார், மாந்தையம்பதியில் வாழும் மகுடத்தியாகியை நேசித்து, "சகோதரரே! உம்மாலாகத்தக்க தொன்றுளது. அதுவோ பரோபகாரத்தின்பாற் பட்டது. குமணராஜனை நீரறிந்தவர்தானே. அவ்வேந்தர் பிரானுடைய சிரமானது புதிதாக வெட்டுண்டதுபோற் றோன்றுங்காகூதியில் ஒன்று அமைத்தளிக்கவேண்டும்" என்று கேட்டு அவனையும் புகழ, அவன் அவ்வண்ணம் அமைத்துக் கொடுத்த தலையைக் கொண்டுவந்து இளங்குமணனுக்குக் காட்டினார். அதனைக்கண்ட இளங்குமணனது மனம் முன்னைய நிலையினின்றும் மாறிப் பெருங்கவலைக்குள்ளாயது. அவன் சாத்தனாரைப் பார்த்து, "ஐயா! புலவர் பெருமானே! இனி நான் என்னுடன் பிறந்த அண்ணனை உயிரோடு காணப்போகிற தொழிந்ததோ? என் அறியாமையின் பயனாய், மகிழ்வைத் தருமென்றெண்ணிய வென் எண்ணம் இப்போது பழியோடு கூடிச் சதா என்னை வருத்தக் கூடிய துன்ப வடிவாக மாறிவிட்டதே" என்று வாய்விட்டுப் புலம்பலானான்.

அப்போது வித்வகோலாகலர் அவனை நோக்கி அண்ணலே!

" எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு "

என்னும் இதோபதேசத்தை மறந்து, நீரே தேடிக்கொண்ட இதற்கு வருந்துவது பேதைமைத்தனமல்லவா? ஆயினும் எங்கட்கு உயிர்ப்பிக்கும் வல்லமையுமுண்டு. நீர் மனப்பூர்வமாக விரும்பின், உமது அண்ணனைப் பழையபடி எழுப்பித் தருவோம்" என்றனர்.

இவ்வமுதமொழி இளங்குமணனுக்குப் பேரானந்தத்தை யளித்தது. உடனே அவன் "கவீச்சுரரே! புவீச்சுரனை என்னைக் கனப்படுத்த எனது அரும்பெற லண்ணனை எழுப்பி யருளக்கடவீர்; முன் விளம்பரப்படுத்திய பரிசுக் கதிகமான பரிசு உமக்களிப்பேன்" என்று போற்றினன். கவீந்திரரும் குமணராஜனைக் கண்டுபிடித்துக் கொண்டுவந்தனர். அச்சமயம் உடன்பிறந்தாராய அவ்விருவர்க்கும் இரத்த பாசத்தாலுண்டான அன்பின் செய்கை கண்டோர் மனதைக் கவர்ந்து, "ஆ! சகோதரத்துவ பாவனையின் மகத்துவம் இருந்தவாவென்னே என்று உரத்துச் சொல்லும்படி அவர்களை ஆனந்தாதிசயக்கடலில் அமிழ்த்திவிட்டது. குமணராஜன் சபையோரைப் பார்த்து, "சகோதர சகோதரிகாள் !

" வெம்புங் காலம் வெதும்பி விழுஞ்சிரம்
செம்பொன் கோடி விலையெனச் செப்பினன்
உம்பர் நாடும் உலகெங்குந் தேடினும்
எம்பி போலெனக் கியாவர் இனியரோ "

என்றான். இவ்வாறல்லவா சகோதரத்துவபாவனை இருக்கவேண்டுமே. இது நிற்க, இராம ராஜ்ஜியத்தில், இச்சகோதரத்துவ பாவனையை, ஸ்ரீராமபிரான் நடத்திக்காட்டிய அற்புதத்தையும் சிறிதுபேசி, அச்சகோதரத்துவ பாவனையில் நாம் உள்ளபடி ஈடுபடுவோமாக. (வரும்)

ம. இராஜகோபால பிள்ளை,
கோமளேசுவரன் பேட்டை.

கம்பராமாயண நீதிச்செய்யுள்.

(174-ம் பக்கத் தொடர்ச்சி.)

(37) இன்பத்தி லிறுமாந்து தோணோக்கி யின்றமத
துன்பத்தி லழுந்துவார் தொல்லுலகி லறியாதார்
இன்பதுன் பங்களே யெய்தியபோ திவை யெல்லாம்
முன்பற்று விடாதவினைப் பயனென்பார் முழுதுணர்ந்தோர்.

(சீதை வனம்புகு. 72.)

இச்செய்யுள், இளையபெருமாள் பிராட்டியாரை யரண்யத்தில் விட்டு வரவழைத்தேகு நெறியின்கண், அன்னையார்க்கு மனோதிட முண்டாமாறு உன்னற்கரிய இன்னல் பல மன்னிய ஞான்றும் தன்னிலை திரியா மன்னவர் சரிதையை நன்னயமுடனே நவின்ற சந்தியிலுள்ளது.

(இ-ள்.) "அம்மா! இம்மாநிலத்து கல்வி யறிவில்லாச் சிறியோர் இன்பமுற்ற காலத்திறுமாப்புக்கொண்டு தோள்கள் பூரிக்கக் களிப்படைந்து, துன்பம் நேர்ந்தவழி துக்கசாகரத்தழுந்தி வருந்துவார்கள். முற்றுமுணர்ந்த பெரியோர், இன்பமேனும் துன்பமேனும் தம்மை யடைந்தக்கால் இவைகளெல்லாம் பழவினையின் பயனெனக் கருதி, இன்பத்தி லின்பமடையாமலும் துன்பத்திற் றுன்பமடையாமலும் சமமாக்கருதி யிருப்பார்" (எ-று.)

இன்பமும் துன்பமும் ஓரிடத்தும் நிலைபெற்றிருப்பனவல்ல. சகடக்கால்போல மாறிமாறிவரு மியல்புடையவை. 'யாரே கடைபோகச் செல்வமுய்த்தார்?' 'அளந்தனபோக மவரவராற்றால்'. இன்பமென்பது துன்பக் கடலினிடையிலுள்ளது. சேற்றின் நடுவிற் றோன்றுஞ் செங்கமலம். விடவா யராவினுச்சியி னொளிரும் உச்சிதமணி, எளிதி னெய்தப் பெறாவ தொன்றன்று. இன்ப மிறை யளவிற்றாயின் துன்பந் தொடுகடலொக்கும். ஊன்றியோசிக்கு மிடத்து ஊனோடுடலுயிர் வாழ்க்கையே உறுகணிற் குறையுள் (துன்பத்திற்கிருப்பிடம்). ஆகவே, இன்பமெய்தியக்கால் உன்னமுவந்தும், இடுக்கண்வந்துற்றபோது இருந்தேங்கியு மிருப்போமாயின் நமது வாழ்க்கை துக்கவாழ்க்கையாகவே முடிவுறும். நிற்க,

துன்பத்தினிமித்தம் சோகிப்பதாலுண்டாம் பயன் யாது? சிறிதளவையேனும் குறைவுபடுத்தவோ 'உறற்பால நீக்கலுறுவர்க்கு மாகா' அணைகடந்த வெள்ளம் அழுதாலும் திரும்பாதே. அழுவதால் துன்பம்

சுரிக்குமேயன்றி அணுவேனும் குறையாது. 'வருந்தி யழைத்தாலும் வாராத வாரா; பொருந்துவனபோமி னென்றால் போகா'.

"சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
உறுகாலத் தூற்றாகா வாமிடத்தே — யாகும்
சிறுகாலைப் பட்ட பொறியு மதனால்
இறுகாலத் தென்னை பரிவு." (சமணமுனிவர்.)

நாமியற்றிய நல்வினைப்பயனாகிய இன்பத்தைக் களிப்புடனேற்றுக் கொள்வதேபோல், தீவினைப்பயனாகிய துன்பத்தையும் ஏற்றுக்கொள்ளாமல் முறுமுறுப்பதென்னை? இக்கருத்தை நாயனாரும்,

"நன்றாங்கால் நல்லவாக் காண்பவ ரன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்?" என்னும்

குறளால் விளக்குகின்றார்.

ஆகையால், "நாம் இன்பவாழ்க்கையை — துக்கமற்ற வாழ்க்கையையுடையோரா யிருக்க விரும்பினால், பிராரப்தத்தால் வரும் இன்பதுன்பங்களைச் சமமாய்க்கருதி, நடுநிலைமையிலிருந்து, இவைகளெல்லாம் நமக்கல்லவெனக்கருதி—இன்பத்தில் மகிழாமலும் துன்பத்தில் துயருறாமலு மிருத்தல்வேண்டும்" என்னும் நீதியை இச்செய்யுளால் அறியவேண்டியவர்களாகின்றோம்.

" வாழ்வது வந்தபோது மனந்தனில் மகிழவேண்டாம்
தாழ்வது வந்ததானால் தளர்வரோ தக்கோர் "
* * * * * * "
" ஞானிக்கில்லை யின்பமுந் துன்பமும் "

38. மூங்கிலிற் பிறந்த முழங்குதீ மூங்கில் முதலற முருக்குமாப்போலத்
தாங்கருஞ் சினத்தீ தன்னுளே பிறந்து தன்னுறு கிளையெலாஞ் சுயிக்கும்
ஆங்கதன் தன்மை யறிந்தவர் கமையாலதனை யுள்ளடக்கவு மடங்கா
தோங்கிய கோபத் தீயினை யொக்கு முட்பகை யுலகில்வே றுண்டோ

(இலவணன் வதை. 29.)

இப்பா, எப்பாருமேத்தும் ஒப்பாரிலாத அப்பிரமேயனாகிய காகுத்தன் இலக்குவனுக்கு இராசநீதி யியம்பிய வவசரத்துள்ளது.

(இ-ள்.) "தம்பி! மூங்கிலில் பிறக்கும் அக்கினியானது, அம்மூங்கிலை வம்சத்துடனெரித்தழித்து விடுவதுபோல, மனிதனிடந்தோற்றும் அடக்கமுடியாத கோபமாகிய நெருப்பும் அவனைக் கிளையோடு நாசமாக்கும். அதன் தன்மையையறிந்தவர்கள் பொறுமையாலடக்கினாலும் அடங்காமல் மூண்டெழும் கோபாக்கினியைப் போன்ற கொடிய பகை உலகத்தில் வேறொன்றுண்டோ?" எனக்கூறினார். கோபம், குரோதம், சினம், சீற்றம், வெகுளி முதலியன ஒரு பொருட் சொற்கள்.

பகை, அகப்பகை புறப்பகை யென விருவகைத்து. அகப்பகை, நமக்குள்ளிருக்கும்பகை. அவை, காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மார்ச்சரியம் எனவாறு. அன்னியமாக விருப்பது புறப்பகை. இவற்றுட் பின்னதின் முன்னதே இன்னாதது. அறிபகையினின்றுந் தப்பலாம்; அறியாப்பகையினின்றுந் தப்புதலரிதரிது. ஆகலின், அகப்பகை விஷயமாக நாம் மிக்க எச்சரிக்கையோடிருத்த லத்தியாவசியம். கோபத்தை யடக்கவேண்டும். கோபத்தை யடக்குதலே சற்குணம். அதுவே தவம்.

“ உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க — வெள்ளம்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு ”

“ எள்ளிப் பிறருரைக்கு மின்னுச்சொல் தன்னெஞ்சில்
கொள்ளி வைத்தாற் போலக் கொடிதெனினும் — மெள்ள
அறிவென்னும் நீரா லவித்தொழுக லாற்றின்
பிறிதெனினும் வேண்டாம் தவம். ”

‘கோபமே பாபங்களுக்கெல்லாம் தாய்தந்தை’, ‘கோபத்தாலழிந்தவர் கோடி கோடியே’. ஆகையால் ‘ஆறுவது சினம்’. புறப்பகையாலழிந்தவரினும் அகப்பகையால் மாண்டவ ரநேகம். காரியசித்திக்குச் சத்துரு சினமே. வெகுளாமை சுவராஜ்யசித்திக்கு மார்க்கம். ‘வெல்வது வேண்டின் வெகுளிவிடல்’. கோபம் பைத்தியம்போன்ற வோர்நோய். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கொள்ளிவாய்ப்பேய். நல்லறிவைக் கெடுக்கும் நன்றிகெட்ட நாய். கோபகாலத்தில் கண்ணும் முகமும் சிவப்பது எதனால்? இரத்தம் குபீரெனப் பொங்குவதால். உடல் விடவிடத்தலும், உதடு துடிதுடித்தலும், நாப்படபடத்தலும் உண்டாவது இரத்தம் இரத்தக்குழாய்களில் அளவுக்கதிகமாய்ப் பாய்வதனாலேயே. இது சற்று மிதமிஞ்சின் அக்குழாய்கள் வெடித்துப் பிராணப்பிரயாணமுண்டாதல் திண்ணம். சினந்தணிந்தபின் சரீரநிலையை, உடலின் இளைப்பை, நரம்புத்தளர்ச்சியை, உற்று நோக்குவோர்க்கு உண்மை புலனாம். கோபம் சண்டாளம். சீற்றம் கூற்றினும் கொடிது.

“ தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.”
“ சினத்திற் பகையு முளவோ பிற. ” (குறள்.)

இக்காரணத்தாலேயே, பொய்யாமொழியார் இக்கொடிய கோபத்திற்குச் ‘சேர்ந்தாரைக் கொல்லி’ யெனப் பெயரிட்டனர்.

அக்கோபத்தீயை அறிவென்னும் நீரினால் அவித்துத் தலையெடுக்க விடாதிருப்பின்,

“ உள்ளிய வெல்லா முடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின். ”

என்ற தமிழ் மறையின்படி கோபத்தை விடின், இம்மை, மறுமை, வீடு முதலான நினைத்த காரியங்களியாவும் கைகூடப்பெறும். இன்றேல் தரையிலுறைந்தகை தப்பாமற் படுதல்போல் இம்மை மறுமைச் சுகங்களை யிழந்து மீளா நரகிற் காளாக வேண்டிவரும்.

ஆகலின், கோபத்தை யொழித்துச் சாந்தத்தை — பொறுமையை — மனோவடக்கத்தை — பூஷணமாக்கொண்டு ஒழுகுவோமாயின் ஆண்டவனருளுக்குப் பாத்திரராகி, அந்தமிலின்பத் தழிவில் வீட்டை யெய்தப் பெறுவோ மென்பது பெறப்படுகின்றது. ஓம்சாந்தி: ஓம்சாந்தி: ஓம்சாந்தி:

கம்பராமாயண நீதிச்செய்யுள் முற்றுப் பெற்றது.

தமிழுலகம் பிழை பொறுக்க.

பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர்,
இராணிப்பேட்டை.

ஹிந்துமதம்—அதன் பெருமை.

(ஸ்ரீமான் வி. நாராயணசாமி ஐயர் எழுதியது)

(215-ம் பக்கத் தொடர்ச்சி.)

மும்மார்க்கம்.

மும்மார்க்கத்தின் பகுதியாக நமது மதம் முக்கியமாய் உபதேசிப்பது யாதெனில், சர்வ வியாபியாயும், சர்வ சக்தனாயும், சர்வஞானியாயு மிருக்கின்ற ஒரு வஸ்து, உலகத்திலிருக்கப்பட்ட ஜீவராசிகளைத் தர்ம மார்க்கத்தில் அனேக பந்தத்தால் கட்டுகின்ற தென்பதாம். இவ்வுண்மையை வேதாந்தத்தின் பிரகாசமான உபதேச மொழிகளால் அறிகின்றோம். “சர்வம் கலு இதம் பிரமம்” இவைகள் எல்லாம் பிர்மம், “தத்வமஸி” நீ அதுவா யிருக்கிறாய். “அகம்பிர்மாஸ்மி” நான் பிர்மமா யிருக்கிறேன் என உபநிஷத்துக்கள் கோஷிக்கின்றன.

இரண்டாவதாகத் தெரிந்து கொள்ளுகிறது கடவுள் மூவகையாக உலகத்தில் பிரகாசிக்கின்றார் என்று. படைக்கின்றார், காக்கின்றார் அழிக்கின்றார். இவைகளைத்தான் கார்யத்திற்கொரு மூர்த்தியாக முறையே பிர்மா, விஷ்ணு, ருத்திரன் என வகுத்திருக்கின்றோம். ஆனால் சாதாரண மனிதருக்குள் தகுந்த ஆராய்ச்சியும் போதுமான சாஸ்திர ஞானமுமில்லாதவர்கள், இவ்வெறும் கட்டுக்கதைகளை நம்பி ஒரு மூர்த்தி மற்றொன்றைவிடப் பெரிதென்றும் சிறிதென்றும் சண்டையிடுகின்றனர். ஒரே கடவுள் மூன்று விதமாகத் தோன்றுகின்றார் என்பதுதான் ரகஸ்யம். இதை எம்மதமும் மறுக்கவில்லை.

மூன்றாவதாக இவ்வுலகத்தைவிட வேறு உலகங்களிருக்கின்றன வென்னும் நம்பிக்கை. ஒவ்வோர் உலகமும் அதிக வேற்றுமைகளை யுடையதாக விருக்கின்றது. இவ்வூனக் கண்ணால் பார்க்கும்படியான அனேக நக்ஷத்திரமண்டலங்கள் சூர்யமண்டலங்கள் முதலியவைகளைத் தவிர

ஜீவராசிகள் வசிக்கத் தகுந்ததாயும் நமது ஊனக் கண்களுக்குத் தெரியாததாயுமிருக்கின்ற உலகங்களிருக்கின்றன. இப்பூவுலக வாசமானதும் ஆன்மாக்கள் தங் தம் கர்மாவிற்குத் தகுந்தாப்போல் அவ்வவ்விடங்களுக்குப் போய் வசிக்கின்றன. திரும்பவும் இவ்வுலகத்தில் பிறக்கின்றன.

மற்றோர் நம்பிக்கை சாதாரணமாக நம்மவர்களுக்கு உண்டு. அதாவது சர்வசக்தனான ஒரு கடவுளின் ஆக்ஞைக்கு அடங்கினவர்களாய் இயற்கைக்கும் சட்டங்களுக்கும் விரோதமில்லாமல், அனேக உலகங்களை ஆளத் தகுந்தவர்களாய் தேவதைகள் எனும் பெயருடன் வசித்து வருகின்றனர் என்பது.

அவதார விசேஷம்.

எல்லா மதத்தினர்களும் நம்புகின்றதாயிருந்தாலும், நம்மதத்திற்கு விசேஷ உரிமையுடைத்தாயிருப்பது. அவதாரங்களிடத்து நம்பிக்கை வைப்பது. இவ்வவதாரங்கள் சர்வக்ஞனான ஒருவனிடத்திலிருந்து உண்டாகிறதினால் பிரிக்க முடியாதது. ஆனால் அவைகள் எப்படி தோன்றுமென்றால் அனேக குன்றுகள் மத்தியில் மலை எப்படியோ. அனேக நக்ஷத்திரங்கள் மத்தியில் சந்திரன் எப்படியோ அப்படியே. இவர்களைத் தான் கடவுள் அம்சம் பெற்றவர்களென்றும், ஆவேசங்களென்றும் மற்றும் பல பெயர்களுடனும் வழங்குவது. உலகத்தில் கஷ்டங்களோ அதர்மங்களோ மனிதர்களால் நிவர்த்திப்பதற்கு முடியாத அளவு அதிகமாய் விட்டால் அதை நிவர்த்திப்பதற்குக் கடவுளேயோ, அல்லது அவரம்சம் பெற்றவரோ வரவேண்டி இருக்கின்றது. கடவுள் ஓர் உருவத்துடன் வந்துவிட்டால் மற்ற விவகாரங்களைக் கவனிப்பது யார் எனலாம். ஆனால் எப்படி ஒரு மனிதனை முள் தைத்தபொழுது, அவ்வலியை நிவர்த்திப்பதற்கு அதிக ஜீவசக்தி வேண்டி இருந்தபோதிலும் மற்ற கார்யங்களும் அவன் தேகத்தில் நடைபெறுகின்றனவோ அதே போல்தான்.

கடைசியாக, நமது வைதிக மதம் போதிப்பது, நம் ஆன்மாவானது கடவுளின் ஓர் அம்சம் என்று தான். சிருஷ்டி சமயத்தில் கடவுளிடத்திலிருந்து ஆன்மாவானது பிரிகிறது. பிரிந்து அனேக சுகங்களையும் கஷ்டங்களையும், பல ஜென்மங்களில், முன்செய்துள்ள கர்மங்களுக்குத் தகுந்தவாறு அனுபவித்து, கடைசியாக பிர்மஞானம் பெற்று, ஜீவன் முக்திநிலை எனும் பெரும்பேற்றை யடைந்து கடவுளிடத்தே போய்ச் சேருகின்றது.

எதை விரும்பவேண்டும் ?

இதுவரையிலும் அதிக சுருக்கமாக "நினைக்கவேண்டியவைகள் யாவை" எனும் கேள்விக்கு, நம் ஹிந்து மதம் என்ன பதில் அளிக்கின்றதென்பதைப் பார்த்தோம். இனிமேல் "எதை விரும்பவேண்டும்" எனும் விஷயத்தை ஆராய்வோம்.

நாம் எல்லோரிடத்தும் அன்புள்ளவர்களாக இருக்கவேண்டுமென்று விரும்பவேண்டும். இதைத்தான் ஹிந்து மதத்தின் ஒவ்வொரு சாஸ்திர

மும் கூறுகிறது. "அஷ்டாதச புராணேஷு-போதஸ்ய வசனத்வயம் ! பரோபகாராய புண்யாய பாபாய பரபீடனம்!" பதினெண் புராணங்களிலும் புத்திமான் சொல்வது இருவார்த்தைகளே. பிறருக்கு நன்மை செய்வது புண்ணியம், தீமை செய்வது பாபம் என்பதே. நம்மைவிட மூத்தவர்களிடத்தும், ஞானிகளிடத்தும் மரியாதை மூலமாகவும், நம்மை ஒத்தவர்களிடத்து சினேக பாவத்தாலும், நம்மைவிடத் தாழ்ந்தவர்களிடத்து பரிதாபத்தாலும், கருணையாலும், நம் அன்பைக் காட்டவேண்டும். எம்மதம் இவ் அன்பை போதிக்கின்றதில்லையோ, அது ஹிருதய மில்லாத மனிதன் எப்படி இறந்து அசுத்தப்படுவானோ, அதேபோல் அம்மதமும் ஒழியும்.

எம்மதத்தினர்களாவது எத்தேசத்தவர்களாவது, உத்தமமான நாகரிகத்தை யடையவேண்டுமானால் அவர்கள் மூன்று விதத்தில் உயர்வு பெற்றிருக்கவேண்டும். (1) எல்லாவித அறிவையும் போதிக்கக்கூடிய சாஸ்திரங்கள் அதிகமிருக்கவேண்டும். (2) தேர்ந்த கைத்தொழில்களிருக்கவேண்டும். (3) எல்லாவற்றையும் விட அதிமுக்கியமாய் சுத்தமான நடவடிக்கைகள் வேண்டும். கருணையும் தர்ம சிந்தனையும், ஜீவராசிகளிடத்து அன்புமில்லாத நாகரிகம் உத்தமமானதல்ல. எல்லாத் தேசத்தவர்களும் எல்லாச் சமயத்திலும், 'அன்பே சிவம்!' உன்னைப்போல் உன் அயலானை நினை என்பவைகளையே போதிக்கின்றனர். ஒரு மதம் உத்தமமானதென்று சொல்வதற்கு முன்பாக, அது சந்தோஷம் அடைவதற்குக் காரணமாயிருக்கின்ற 'உலக சகோதரத்வத்தை'ப் பெறவேண்டும். ஆனால் தற்காலத்தில் தெய்வீக சக்தியையும், அன்பையும் விட்டுவிட்டு, மூட நம்பிக்கைகளால் குரூரத்தன்மையைக் கைக்கொண்டு மதத்தின் உண்மை விளக்கத்தை மறந்து, போலிகுருக்கள் குறுகின அறிவினால் தூண்டப்படும் சமய சச்சரவுகளும் ஜாதிச் சண்டைகளும் அதிகமாகின்றன. நம் ஹிந்து மதமும் தற்காலத்தில் அத்தகைய நிலைமைக்கே வந்துவிட்டது. அந்தோ! ரிஷிகளுடைய சந்ததிகளைச் சேர்ந்தவர்களென்று, வாய் கூசாமல் சொல்லிக்கொண்டு, கடவுளின் புத்திரர்களாகிய சில மனிதருக்கு ஜீவஜெந்துக்கள் அடையக்கூடிய சாதாரண உரிமைகளைக்கூடக் கொடுக்க மறுக்கின்றார்கள். என்ன பேதமை! இவ்வுலகத்திடத்து அவர்கள் உரிமை யிழந்தவர்கள் போலும்! இத்தகைய சமூகச் சீர்கேட்டை நிவர்த்திக்கவேண்டி சமய ஆசாரியர்களும், கற்றறிந்த பெரியோர்களுமே முன்வரல்வேண்டும்.

சடங்குகள்.

கடைசியாக எதைச் செய்யவேண்டும் என்பதைப்பற்றி ஹிந்துமதம் தெரிவிப்பது யாதெனில், சமூகத்திலேயும் தனியேயும் ஒவ்வொருவரும் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்றும் அவன் வாழ்நாட்களில் செய்ய வேண்டிய சம்ஸ்காரங்களையும், சடங்குகளையும் பற்றியேயாம். இவ் வழக்கங்கள், தேசங்களைப் பொறுத்து வேறுபடுகின்றன. மனோதேக தத்வங்

களின்மேல் வேறுபடுகின்றன. ஆகையால் ஒரு தேசத்தில் செய்யும் சடங்குகள் மற்றொரு தேசத்தில் செய்யவேண்டிய அவசியமில்லை. இச்சடங்குகளும் சம்ஸ்காரங்களும் ஒவ்வொருவருக்கும் வேண்டுமென்பதில்லை. ஆனால், எல்லோருக்கும் வேண்டாம் என்றும் சொல்ல முடியாது. ஒரு ஜீவனின் வளர்ச்சிக்குக் குறிப்பிட்ட காலம்வரை இவைகள் அவசியம் வேண்டியே இருக்கின்றன. நம்மவர்கள் முக்கியமாய் மூன்றுவித சடங்குகள் செய்கிறார்கள். அவைகள், பிறப்பதற்குமுன், பிறந்தபின் வாணாட்களில், இறந்த பிறகு, செய்யவேண்டியவைகள் என்பதே. இச்சடங்குகள் எல்லாம் ஆத்மாவின் ஸ்தூல, சூட்சும தேகங்களின் அழுக்குகளைப் போக்கிச் சுத்தம் செய்து இம்மையிலும், மறுமையிலும் உத்தமமானவைகளாகச் செய்து கடவுளின்பால் சேர பக்குவமாக்குகின்றன. நமது கண்களுக்குத் தெரியாது உலகத்தில் வசிப்பவர்களோடு 'சம்சர்க்கம்' வைத்துக்கொள்வதற்கும், அவர்களிடமிருந்து அனேக நன்மைகளைப் பெறுவதற்கும் சில சடங்குகளிருக்கின்றன.

நம் மதத்தின் இப்பகுதியிலேயே வர்ணாச்ரம தர்மங்கள் அமையப் பெற்றிருக்கின்றன. இவைகள் அருத்தமில்லாமல் ஏற்படுத்தப்பட்டன வென்று குறை கூறுகின்றனர். ஆர்யவர்க்க சிருஷ்டி ஆரம்பத்திலேயே வைவஸ்வத மனுவினால், அவர் குழந்தைகளாகிய நமக்கு, கொடுக்கப் பட்ட ஒரு பெரிய தர்மத்தைக் குறைகூற முடியுமா? கேவலம் மனோதத்வ ஆதாரத்தின்மேல் ஸ்தாபிக்கப் பெற்றதாகையால் சாஸ்திரமானது குறை கூறமுடியாதது; அழிய முடியாதது. ஆனால் அத்தர்மம் தற்காலம் சங்கரமித்து சீர்குலைந்திருக்கின்றது. அதனால்தான் தீய சம்பவங்கள் பல நேருகின்றன. ஆனால் தக்க பெரியார்கள் அதைச் சீர்ப்படுத்தலாம். அவர்களுடைய வரவு இக் காரியத்தில் நல் வரவாகும்.

மேற்கண்ட கருத்துக்களை ஹிந்துமதத்தின் ஒவ்வொரு சமயங்களும் (sects) அவர்கள் பழையவர்களாக விருந்தாலும், நவீனர்களாக யிருந்தாலும் வைதீகர்களாக விருந்தாலும், லௌகீகர்களாக விருந்தாலும் ஒத்துக் கொள்ளுவார்கள்.

மதம் என்பது அநுபவம்.

நம் மதத்தில், மதம் என்பது "அனுபவம்" என்பதை நாம் மறக்கலாகாது. நாம் வேதாகமங்களில் "அனுபூதி" எனும் சொல் எல்லாவிடங்களிலும் பிரகாசிக்கின்றது. கேவலம் மதப்புத்தகங்களைப் படித்தறிந்தவரா யிருப்பதாலேயோ, எழுதுவதினாலேயோ ஒருவனை "அனுபூதி" (Realisation) அடைந்தவன் என்று சொல்ல முடியாது. சில ஹிந்து கொள்கைகளில் நம்பிக்கை வைத்து அதைப் பேசுவதால் மட்டும் நாம் ஹிந்து மதத்தினர்களாக முடியாது. "பிர்மத்தை அனுபவிக்கவேண்டும்" "கடவுளில் வசிக்கவேண்டும்" பிரிக்க முடியாத ஐக்கியம் [illegible]கும் ஆளப்படுகிறவனுக்கும் இருக்கவேண்டும் என்பதே ஹிந்து[illegible]

தினசரி பிரார்த்தனையாக இருந்து வருகிறது. இச்சொற்களைக்கொண்டு கிளியைப்போல சொல்வதில் பிரயோஜனமில்லை. நாம் கடவுளிடத்து நம்பிக்கை வைப்பது, நம் புத்திக்கு ஏற்றதாக விருக்கிறது என்பதால் மட்டுமல்ல. ஆனால் நம் முன்னோர்கள் கடவுளை அறிந்திருக்கிறார்கள். நாமும் அறியலாம். ஆத்மா இருக்கிறது எனும் நம்பிக்கை அது இருப்பதற்குக் காரணங்கள் தோன்றுவதால் மட்டுமல்ல. ஆனால் ஆயிரக்கணக்கான நம் மூதாதைகள் நம் ஆத்மாவை அனுபவித்து உணர்ந்திருக்கிறார்கள். இப்பொழுதும் அத்தகையவர்கள், குறைந்த எண்ணிக்கை புடையவர்களாக இருந்தாலும் இல்லாமலில்லை. இனிமேல் ஆயிரக்கணக்கானவர்கள் வருவார்கள். அப்பொழுதுதான் இந்தியாவிலிருக்கின்ற சமயச் சண்டைகளும் சாதிச்சண்டைகளும் ஒழியும். தேசிய கிளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் பாதகமாயிருக்கின்ற இச்சண்டைகள் சீக்கிரம் ஒழிய வேண்டுமென்றே ஒவ்வொரு ஹிந்துவும் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும்.

என் போன்றவர்களால் எழுத முடியாத ஒரு பெரும்விஷயத்தை, ஏதோ அரைகுறையாக எழுதி முடித்தேன். இச்சிறு கட்டுரையானது மனித வர்க்கத்தில் சிறப்புற்றவர்களால், அனுசரித்து வந்ததும் வருகிறதுமான மதத்தைப் பற்றின விஷயங்களை ஆராயப் புகுவதற்கு ஓர் ஆரம்ப முகவுரையாகத்தானிருக்கும் என்று நம்புகிறேன்.

(கடலூர் ஹிந்துசபையின் பிரசுரம்)
(நவசக்தி.)

ஸ்திரீகளுக்கு வேண்டாதவை.

ஓர் அமெரிக்கன் சங்கத்தில் மனைவிகளுக்கு வேண்டாமென்னும் ஓர் உபதேசத்தைச் சட்டமாகப் பாவிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. என்ன வேண்டாமெனின்:—

1. கலியாணஞ் செய்துகொண்ட மனைவிகள் ஊதாரித்தனமா யிருக்கலாகாது.
2. உன் வீட்டுவாசல் கடக்கவேண்டாம்.
3. வீட்டைக் கவர்ச்சியில்லாததா யிருக்க இடங் கொடுக்கவேண்டாம்.
4. வேறு ஆடவர்களின் வார்த்தைகளுக்குச் செவி கொடுக்கவேண்டாம்.
5. உன் தாயாருடன் அதிக நேரம் கழிக்கவேண்டாம்.
6. உன் பிள்ளைகளை அவர்கள் தகப்பனார் கூறும் நற்புத்தியினின்று கலைக்கவேண்டாம்.
7. உன் கணவன் மனம் வெறுக்கத்தக்க வார்த்தைகள் பேசவேண்

8. உன் வீட்டு விஷயமாகவும் உன் கணவனை நடத்தும் விதத்தையும் அக்கம் பக்கத்தார் போதிக்க வந்தால், அதைக் கொஞ்சமும் அங்கீகரிக்கவேண்டாம்.

9. ஆண்பாலர் உன்னை ஊர்ந்து நோக்கும்படி எதிரே நிற்கவேண்டாம்.

10. கணவனை அடிக்கடி பணத்திற்குத் தொந்தரவுசெய்யவேண்டாம்.

11. தினந்தோறும் கடவுளைத் தொழுதற்கு மறக்கவேண்டாம்.

12. நல்ல ஸ்திரீ, உத்தமி, தாய்க்கொப்பானவளென்ற அரிய பேரெடுக்கும் முயற்சியில் சிறிதும் குன்றவேண்டாம்.

குறிப்பு:—சகோதரிகளே! மேல்கண்ட விஷயங்களை நன்றாகக் கவனியுங்கள். இதுகாறும் நமது மதம் ஆசாரம் முதலியவற்றை அநாகரீகமென்றும், மூடத்தனமான கொள்கைகளென்றும் மேல் நாட்டார் கருதியும் கூறியும் வந்தார்கள். இப்போது கொஞ்சகாலமாக உண்மையை யறிந்துவருகிறார்கள். நமது மதம் சகல மதங்கட்கும் அஸ்திவாரம் போன்றதென்றும், சகல ஞானங்களிலும் சிறந்ததான ஆத்மஞானத்தை யடையும் மார்க்கம் நமது மதத்தில்தான் கூறப்பட்டிருக்கிறதென்றும், மேல்நாடுகளிலுள்ள சிறந்த பண்டிதர்களும் அறிவாளிகளுமாகிய அனேகர் உணர்ந்தும் வெளியிட்டுமிருக்கிறார்கள். மேலும் நமது மதாசாரம் இலௌகிக ஆசாரங்கள் யாவும் சாத்திரயுக்தமாய் அனுபவத்தின்மேல் ஏற்படுத்தப்பட்டவையென்றும் அறிந்துகொண்டிருக்கிறார்கள்.

இப்போது நமது நாட்டு மாதரின் ஆசாரப்படி நடக்கவேண்டுமென்று அவர்கள் கருதுகிறார்கள். அப்படியிருக்க உங்களில் சிலர் மேல்நாட்டு மாதரைப்போல் நடையுடை பாவனைகளில் பழக முயல்வது சற்றேனும் ஒழுங்காகுமோ? நீதியாகுமோ? அல்லது நம் நாட்டின் க்ஷேமத்திற்கு அநுகூலமாகுமோ? சகோதரிகளே! நம் தாய் நாடாகிய புண்ணிய நாடு தெய்வீகத்தன்மை பொருந்திய கற்பரசிகளுக்குப் பிறப்பிடமானது. பெண்களுக்குரிய அச்சம், மடம், நாணம் என்ற குணங்கள் கற்பென்னும் தேவ விருக்ஷத்திற்கு வேலிகள் போன்றவை. அவைகள் அழிந்துபோகத்தக்க ஆசாரங்களை நீங்கள் கைப்பற்றுவீர்களாயின் கற்பென்பது ஒருபோதும் நிலைத்திராது என்பது சத்தியம்.

நம் நாட்டு ஆடவர்களில், ஆங்கிலங் கற்றதால் மேல் நாட்டு நாகரீகமே சிறந்ததென மயக்கங் கொண்டிருக்கும் சிலர் வாலிபவயதுடைய தங்கள் மனைவியர் சகோதரிகள் முதலியவர்கள், தங்கள் நண்பர்கள் முதலிய அன்னிய புருடர்களிடம் தாராளமாய்க் கலந்து பேசுவதும், தாராளமாய் வெளியில் சென்றுலவுவதும் உயர்தரச் சீர்திருத்தம் என்று கருதி, அம்மாதர்கள் அவ்வாறு நடக்குமாறு பழகச் செய்கிறார்கள். ஆயினும் எல்லாப் பெண்களுமே யத்தகைய ஆசாரங்களுக்கு இடங்கொடுக்கமாட்டார்கள். சகோதரிகளே! நம் முன்னோர்களாகிய ஞானவான்கள்

உங்களுடைய இவ்வுலக நன்மைகளை மட்டுங் கருதி உங்களுக்கு ஆசாரங்களை விதிக்கவில்லை. முக்கியமாய் உங்களுடைய மறுமைப்பயனைக் கருதியே, அதாவது மறு ஜன்மத்தில் நீங்கள் தேவலோக போகபாக்கியங்களையும் மோக்ஷானந்தத்தையும் அடையவேண்டுமென்பதைக் கருதியே உங்களுக்குத்தக்க ஆசாரங்களை விதித்திருக்கிறார்கள். அவற்றின்படியே நடக்குமாறு பராசக்தி யுங்களுக்கு அருள் புரியவேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

பத்திரிகாசிரியர்.

ஆரிய சித்தாந்தம்.

(குரு).

(223-ம் பக்கத் தொடர்ச்சி.)

இந்த ஆருணி யென்பவரே உத்தாலகரென்று நூல்களாற் புகழ்ந்து கூறப்பட்டவர். வெறுப்பின்றிக் குரு பணிவிடை செய்து சகல கலாஞானங்களையும் பெற்றுச் சிறப்பு அடைந்தார்.

பிறகு தௌமியர் தமது மாணாக்கர்களுட் சிறந்த உபமன்யு என்பவனை நோக்கி நீ நமது பசுக்களை மேய்த்துக் கொண்டிரு என்று கட்டளையிட்டனர். அவன் அப்படியே பசுக்களை மேய்க்குந் தொழிலைச் செய்து கொண்டிருந்தான். ஒரு நாள் குரு அவனை யழைத்து நீ யெடுத்துவரும் பிக்ஷான்னத்தை யெனக்குக் காட்டிப் பின் புசி யென்றார். அவன் அப்படியே பிக்ஷான்னத்தைக் கொண்டுவந்து வைத்தான். அவர் அவ்வன்னத்தைத் தாமே உண்டுவிட்டார். இவ்வாறே தினந்தோறும் புசித்துவந்தார். பிறகொருநாள் "உபமன்யு! நீ பிக்ஷை யெடுத்துவரும் அன்னத்தை நான் புசித்து விடுகிறேனே; நீ புஷ்டியா யிருக்கிறாயே எவ்வாறு ஜீவனம் செய்கிறாய்" என்று கேட்க, அவன் நான் இரண்டாம் தடவை பிக்ஷை யெடுத்து ஜீவிக்கிறேன் என்று விடை பகர்ந்தான். "குரு நீ செய்தது தவறு. உன்னைப்போல் பலபேர் பிக்ஷை யெடுப்பார்கள். நீ யிரண்டாம் முறை பிக்ஷை யெடுத்தால் மற்றவர்களுக்கில்லாமற்போகும். அதனால் நீ திருடனாவாய். இனி யப்படிச் செய்யாதே" யென்று கூறினார். இன்னும் சின்னாட்கள் கழிந்தபின் ஒருநாள் உபமன்யு நீ யிரண்டாம் முறை பிக்ஷை யெடுப்பதில்லையே எப்படி ஜீவிக்கிறாயென்று கேட்டார். உபமன்யு நான் பசுவின் பாலைக் குடித்து ஜீவிக்கிறேன் என்றார். பசுவின் பாலைப் புசிக்கும்படி நான் உனக்குக் கட்டளையிடவில்லை. அப்பசுவின் பால் அக்கினிஹோத்திரம் யக்ஞங்களுக்கு உபயோகமாவது. அதை நீ குடிக்கத் தகாது என்றார்.

இன்னும் சிலநாட்கள் கழித்து உபமன்யூ! நீ யிப்பொழுது எவ்வாறு ஜீவிக்கிறாய்? பசுவின் பாலையும் குடிப்பதில்லையே என்று கேட்டார். சுவாமீ! இப்பொழுது பசுவின் கன்றுகள் ஊட்டின பிறகு அவற்றின் கடைவாயில் ஒதுங்கி யிருக்கும் நுரையால் ஜீவிக்கிறேன் என்றான். குரு

அப்பா குழந்தாய்! கன்றுகள் உன்னிடத்தில் பிரியமாயிருக்கின்றன. அதனால் அதிகமாக நுரையை ஒதுக்கும். நீ யதை யருந்தினால் கன்றுகளுக்கு ஆகாரங் குறைந்து அவைகள் இளைத்துப்போகும். இது பசுவின் கன்றுகளுக்குத் துரோகம் செய்வதாகும். இனி யப்படிச் செய்யாதே என்றார். உபமன்யு புசிப்பதற்கு ஒன்றுங் கிடையாமையால் காட்டில் தானாகவே முளைத்திருக்கும் எருக்கம் செடிகளின் இலைகளைத் தின்று ஜீவிக்கத் தொடங்கினான்.

எருக்கிலை தின்பதனால் சரீரத்தில் வெப்பம் அதிகரித்துக் கண்பார்வைகள் மறைந்துபோயின. கண் தெரியவில்லை. அதனால் வழியை யறியாமல் ஒரு பாழ்ங்கிணற்றில் தவறி விழுந்துவிட்டான். மாடுகள் வீடு போய்ச் சேர்ந்தன. அதைக் கண்ட குரு வித்தியார்த்திகளை நோக்கி உபமன்யு எங்கே யென்று கேட்டார். அவர்கள் "சுவாமி அவனைப் பசுக்களை மேய்க்கும்படி கட்டளை யிட்டீர்களே! அவன் வனத்துக்குப் போயிருப்பான். பசுக்கள் வந்துவிட்டன. அவன் இன்னமும் வரவில்லை" என்று சொன்னார்கள். அப்படியானால் நாமும் வனத்துக்குப்போய் அவனை அழைத்துக்கொண்டு வருவோம் வாருங்களென்று சீடர்களுடன் குருவானவர் அரண்யத்தில் பிரவேசித்தார். அங்கே போய் "அப்பா குழந்தாய்! உபமன்யு! நீ எங்கே யிருக்கிறாய்? இங்கேவா" என்று அழைத்தார். அது கேட்ட உபமன்யு சுவாமி நான் இந்தப் பாழுங்கிணற்றில் விழுந்திருக்கிறேன்; கரையேற முடியவில்லை யென்று சொன்னான். குரு, அப்பா! நீ யேன் கிணற்றில் விழுந்தா யென்று கேட்டார். அவன் 'சுவாமீ! புசிப்பதற்கு யாதொன்றுங் கிடையாமையால் எருக்கிலைகளைத் தின்று ஜீவித்தேன். அதனாற் கண்பார்வை கெட்டுப்போனமையால் வழி காணமுடியாமல் கிணற்றில் விழுந்து விட்டேன்" என்று கூறினான். குரு குழந்தாய்! நீ வேதமந்திரங்களால் அசுவினி தேவர்களைத் தோத்திரம் செய். அவர்கள் வந்து உனக்குக் கண்ணளிப்பார்கள் என்று சொல்லி விட்டு மாணாக்கர்களுடன் ஆச்ரமம் போய்ச் சேர்ந்தார்.

உபமன்யு அசுவினி தேவர்களைத் துதிக்கத் தொடங்கினான். "சூரியனுக்கு முன் செல்கிறவர்களே! சிறகுள்ளவர்களே! அழிவில்லாதவர்களே! தேவலோகத்திற் பிறந்தவர்களே! ரஜோகுணமற்றவர்களே! விமானத்திற் சஞ்சரிப்பவர்களே! ஆபத் பந்துக்களே! நீங்கள் பக்தர்களைக் காப்பாற்றுகிறவர்கள். ஆபத்தினின்றும் விடுவிப்பவர்கள். அஸத்தியமில்லாதவர்கள். நாஸத்தியர் என்று புகழப்படுகிறீர்கள். மோட்சங் கொடுக்கிறீர்கள். கர்மபலனை விருத்தி செய்கிறீர்கள். தாமரை மலர் மாலையை யணிந்த உங்களைத் துதிக்கிறேன்" என்று வேதமந்திரங்களால் துதித்து எனக்குக் கண் கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான்.

இவ்வாறு துதித்துப் பிரார்த்திக்கப்பட்ட அசுவினிகள் பிரத்தியட்[illegible]மாய், இதோ நாங்கள் வந்துவிட்டோம். உனக்குச் சிறிது பட்[illegible]

கொண்டுவந்திருக்கிறோம். இதைப் புசி, உனக்குக் கண் தெரியும் என்று கூறினார்கள். உபமன்யு குருவின் கட்டளை யின்றி நான் எதையும் புசிப்பதில்லை என்று கூறினான். தேவர்கள் மருந்துக்கு அது அவசியமன்று, நீ உண்ணு என்று சொன்னார்கள். உபமன்யு நான் குருவின் உத்தரவில்லாமல் எதையும் உண்ணமாட்டேன் என்றான். அவர்கள் "முன் ஒரு தரம் நாங்கள் இதைக் கொண்டுவந்து உன் குருவுக்குக் கொடுத்தோம். அவர் தம் குருவின் உத்தரவில்லாமலே யுண்டார்" என்றார்கள். உபமன்யு "எனக்குக் கண்ணில்லாமல் போனால் போகட்டும். நானிதை உண்ணமாட்டேன்; நீங்கள் விரும்பிய இடத்துக்குப் போங்கள்" என்று சொன்னான். அசுவினி தேவர்கள் சந்தோஷித்து "நாங்கள் உனது குரு பக்தி விசுவாசத்துக்காக மகிழ்ச்சி அடைந்தோம். உன் குருபக்தி உன்னைப் பாதுகாக்கும். உன் கண்பார்வைகள் விளங்கும். சகல சாஸ்திரார்த்தங்களும் உனக்கு விளங்கும்" என்று அநுக்கிரகம் செய்துவிட்டு மறைந்துபோனார்கள். உபமன்யுவுக்குக் கண்பார்வை விளங்கிற்று.

அவன் மனமகிழ்ச்சியுடன் குருவினிடம் போய்த் தனக்கும் அசுவினி தேவர்களுக்கும் நடந்த சம்பாஷணைகளையும், அவர்கள் தனக்குக் கண்பார்வை யருளியதையும் சவிஸ்தாரமாகச் சொன்னான். தௌமியர் அதைக்கேட்டு மகிழ்ந்து "உனக்குச் சகல வேதசாஸ்திர இரகசியங்களெல்லாம் விளங்கும்படி நான் அநுக்கிரகம் செய்துவிட்டேன். நீ விரும்புகிற இடத்துக்குப்போய் உன் இஷ்டம்போலத் தவசுசெய்" என்று கூறி விடையளித்தார். உபமன்யு விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார். பைதர் என்பவர் குருவின் கடினமான பணிவிடைகளை யெல்லாம் செய்துகொண்டிருந்து, குருவுக்கு மகிழ்ச்சி யுண்டாக நடந்து விடை பெற்றுச்சென்று கிரகஸ்தாச்சிரமத்தை அநுஷ்டித்துக்கொண் டிருந்தார். அவருக்கும் மூன்று சிஷ்யர்களுண்டு. அவர்களுள் உதங்கர் என்பவர் சிரேஷ்டமானவர். குரு பக்தியிற் சிறந்தவரென்று நூல்களாற் புகழப்பட்டவர். குரு பக்தி விஷயத்தில் உதங்கரையே எல்லாரும் உபமானமாக எடுத்துக் கூறுவார்கள். இவர் குரு பக்தியினால் சர்வ ஞானத்தையும் அடைந்து தவச்சிரேஷ்டராய் விளங்கினார்.

தர்மபுத்திரர் செய்த அசுவமேத யாகத்துக்குச் சென்றிருந்த கிருஷ்ணபகவான் மீண்டுந் துவாரகைக்குப் போகும்போது இந்த உதங்கர் ஆச்ரமத்தை யடைந்து, அவருக்கு வந்தனை வழிபாடுகளைச் செய்து பேசிக்கொண்டிருக்கும்போது உதங்கர் "கிருஷ்ணா! நீ பாரத யுத்தத்தை முன்னிட்டு அநேக பிரஜைகளை அழித்துவிட்டாய். உன்னால் உலகமே அழிந்து போயிற்று என்னலாம். அதனால் நான் உனக்குச் சாபங்கொடுக்கக் கருதுகிறேன்" என்று கூறினார். கண்ணன், "தபோநிதியே பாரத யுத்தம் நடந்ததற்கு விதியே காரணம். என்னால் ஒன்றும் நடக்கவே யில்லை. பாரத யுத்தத்தில் பிரஜைகள் அழிந்த குற்றம் என்னுடையதன்று. விதியைக் கடக்க வல்லவர் யார்? நீர் சாபங்கொடுக்க விரும்பினாற் கொடும்.

நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்று வணக்கமாய்க் கூறினார். உதங்கர் மனமகிழ்ந்து கண்ணனை உபசரித்து விடைகொடுத் தனுப்பினார். கூடவிருந்த தம்பியாகிய சாத்தியகி அண்ணனை நோக்கி "அண்ணா! இவர் யார்? இவர் உமக்குச் சாபங்கொடுக்கிறேனென்று கூறியது எனக்கு மிகவும் ஆச்சரியமாக விருக்கிறது" என்று கூறினான். கிருஷ்ணபகவான், "அப்பா! இவர்தான் குரு பக்தியிற் சிறந்த உதங்க மஹாரிஷி என்பவர். மஹா மகிமையுள்ளவர். சபிக்கத் திறமையுள்ளவர். நானும் சாந்தீபினி முனிவரிஷ்டப்படி கஷ்டமான வேலைகளை யெல்லாம் செய்து நிறைவேற்றினதினாலேதான் மஹா மகிமையோடு புகழப்பட்டு விளங்குகிறேன். குரு பக்தியால் ஆகாதது ஒன்றுமில்லை" என்று கூறியருளினார். ஆதலால் குரு பக்தி ஒன்றுதான் சகல ஞானங்களுக்கும் காரணமாக இருக்கிறதென்று நன்கு விளங்குகிறது.

பூர்வகாலத்திலிருந்த தவச்சிரேஷ்டர்கள் எல்லாரும் குரு பக்தியாலேயே சகல சித்திகளையும் பெற்று விளங்கினார்கள். எந்த வித்தையையும் குருவினிடத்திற் கேட்டே தெரிந்துகொள்ளவேண்டும். சிஞ்சிஞர்களாகிய ஜீவர்கள் தாமே புணர்ந்துகொள்ளு மியல்பில்லாதவர்கள். முன்கூறியபடி குரு சிஷ்யர்களிடத்தில் பொருளை அபேட்சிப்பதில்லை. அவர்கள் தங்களுக்குரிய அறு * தொழில்களாலேயே ஜீவித்தார்கள். ஆகாராதிகளுக்குக் குறைவில்லாத சிஷ்யர்களும் கவலையின்றிக் குருவினால் விடப்பட்ட பணிவிடைகளைச் செய்துகொண்டு ஓதிச் சாஸ்திரங்களின் கரையைக் கண்டார்கள். பிரமசாரிய தர்மம் தவறாமல் நடந்து வந்தது. அவர்கள் குருகுலவாசஞ் செய்து சதா குருவின் சந்நிதியிலேயே யிருந்தமையால் சதாசாரப் பிரவர்த்தகர்களாகவே யிருந்தார்கள். ஒழுக்கந் தவறியவர்களைக் குருகுல வாசத்திலிருந்து விலக்கி விடுவார்கள். சிஷ்யரிடம் தவறு கண்ட குருமார்கள் அப்பொழுதே யவர்களைத் தண்டித்து நல்வழிப்படுத்தி வந்தார்கள். அன்ன வஸ்திரங்களுக்குக் குறைவில்லாமையால் மாணாக்கர்களுக்கு ஆசை யென்பதில்லை. சதா வேதசாஸ்திரங்களை ஓதுவதால் மனம் ஒரு நிலைப்பட்டு நிற்கலாயிற்று. மனம் வசப்படவே தெய்வசிந்தனை யுண்டாயிற்று. தெய்வதியான மகிமையால் ஞான சித்தியைப் பெற்றார்கள். கல்வி யறிவும் சாஸ்திரஞானமும் எளிதிற் கைகூடின. குருகுலவாசத்தில் கல்வியைவிட சதாசாரமே மிகுதியாகக் கவனிக்கப்படும். குருமார்கள் தமது சிஷ்யர்களுக்கு நல்லொழுக்கங்களையே புகட்டி வந்தனர். இது காரணமாகவே முன்னோர்கள் சீருஞ் சிறப்பும் பெற்றுச் சிறந்து வாழ்ந்தார்கள். (தொடரும்.)

சிவானந்தசாகரயோகீஸ்வரர்.

---

* 1. ஓதல், 2. ஓதுவித்தல், 3. வேட்டல், 4. வேட்பித்தல், 5. ஈதல், 6. ஏற்றல்.

பகவத்கீதை வசனம்.

(229-ம் பக்கத் தொடர்ச்சி.)

9-வது மாயாவிகார* அத்தியாயம்.

(முன் அத்தியாயத்தில் சகுணப்பிரம்ம உபாசனையால் பிரம்மலோகத்தை யடைந்த உபாசகன் அங்குள்ள போகங்களைப் புசித்தபின் கற்பாந்தத்தில் பிரம்மஞானத்தால் முத்தியடைவன் என்று பகவான் அருளிச் செய்தமையால், "அந்தப் பிரகாரமே முத்தியடையப்படுவதா? அல்லது வேறு அந்நிய மார்க்கத்தாலும் அடையப்படுவதா?" என அர்ச்சுனனுக்குண்டாகும் ஐயத்தை நீக்கும்பொருட்டு இந்த அத்தியாயம் தொடங்கப்படுகிறது.)

துன்பத்தை யளிக்கும் பிறவியை யொழிப்பது முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட கிரம முத்தியோ அல்லது அந்நிய முத்தியுளதோ என்று அர்ச்சுனன் மனதில் உதித்த சந்தேகத்தை யறிந்த மேகவர்ணனாகிய கண்ணபிரான் பின்வருமாறு அருளிச் செய்கிறார்:—

(இப்போது பகவான் முன் கூறிய சகுணப் பிரம்மத்தியானத்திலும் ஆன்மஞானமே சாட்சாத் மோக்ஷசாதனம் என்பதை யறிவிக்கத் தொடங்குகிறார்.)

ஏ பார்த்த! உலகிலும் சாத்திரங்களிலும் கூறு நிற்கும் சகல ஞானங்களிலும் முதன்மையானதும் அநுபவமா யறியக்கூடியதுமான ஞானத்தை, இரகசியமான பொருள்களனைத்திலும் அதி இரகசியமானதை, எள்ளளவேனும் துன்பமில்லாததை, பல ஜன்மங்களிற் றேடிய சகல பாபங்களையும் ஒழிக்கும் உத்தம பவித்திரமாயுள்ள ஞானத்தை உனக்குரைக்கின்றேன் அறிந்துகொள்வாயாக.

அத்தகைய இணையற்ற ஆன்மஞானமானது அக்ஷயமாக (அழிவற்றதாக) உள்ளது. பல ஜன்மங்களிற் செய்த நிஷ்காம தருமங்களின் பல வடிவமானது. குருவருளால் கஷ்டமின்றி அடையத்தக்கது. ஆயினும் அதை யடையவேண்டுமென்ற சிரத்தை யில்லாதோர் என் அருளைப் பெறாமல் பிறப் பிறப்பாகிய துன்ப சாகரத்தில் உழன்றுகொண்டிருப்பர்.

[ஞானத்தை யடையவேண்டும் என்ற சிரத்தையோடு குரு முகத்தில் சிரவண மனனாதிகளைச் செய்து முயன்றால்தான் ஞானம் கிட்டும். ஏனையோர்க்கு அது அடையச் சாத்தியமானதன்று.]

(இப்போது பகவான் ஆன்ம ஞானத்தை யருளிச் செய்கின்றார்.)

ஏ பார்த்த! ஒருவராலும் காணப்படாத அவ்வியக்த மூர்த்தமே சொரூபமாகவுடைய நான் ஜகங்களனைத்தும் வியாபித்து நிற்பேன். சராசரங்களனைத்தும் என்னிடத்தில் பொருந்தி யிருக்கும். ஆனால் சர்வேசுர

---

* இதற்கு வடநூலில் "இராஜவித்தியா ராஜகுய்ய யோகம்" என்று பெயர்.

ஞகிய நானே அவற்றில் பொருந்தியிரேன். எனது அவ்வியக்த சொரூபத்தை யறியாதவர்களது ஊனக்கண்ணிற்கு நான் இப்பிரபஞ்சத்தில் பொருந்தி யிருப்பவன்போலவே காணப்படும்.

அர்ச்சுனன்:—ஏ பகவான்! தாங்கள் அவ்வியக்த மூர்த்தியாதலின் தங்களுக்குச் சகத்தில் ஸ்திதிகூடாதேனும் சகல பிரபஞ்சத்திற்கும் தங்களிடத்தில் ஸ்திதிகூடுமல்லவா?

பகவான்:—ஏ பார்த்த! நான் சிருட்டிக்கு முன்பு ஒன்றோடும் சம்பந்தியாமலே இருப்பேன். உலகம் கற்பிதமான தாகையால் அது என்னோடு சம்பந்தித்து நிற்காது: அற்புதமான என்றன் இயற்கையினைப் பார்ப்பாய்.

("எனது சச்சிதானந்த சொரூபம் ப்ரபஞ்சங்கட்கெல்லாம் காரணமாகவிருந்தாலும் அவற்றில் நானிருப்பதன்றாம். பிரபஞ்சங்களும் ஆரோபமாகிய கற்பிதமாதலின் உண்மையில் என்னிடத்தில் அவை இருக்கவில்லை" என்பதாம்.)

(இப்போது பகவான் தாம் உலகிற்காதாரமாயிருக்கும் விவரத்தைத் திருட்டாந்த பூர்வகமாய் அருளிச் செய்கின்றார்.)

ஏ பார்த்த! எல்லா விடங்களிலும் சென்றுகொண்டு எல்லையிலாத அளவாய்ச் சதா சலித்துக்கொண்டிருக்கும் வாயுவானது ஆகாயத்தில் எப்படியிருக்கிறதோ, அவ்வாறே சகல பிரபஞ்சங்களும் எனது சொரூபத்தில் சம்பந்தப்பட்டாலும், என்னைத்தவிர வேறொன்றினிடத்தும் தோன்றாமலும் எப்போதும் என்னிடத்திலேயே நிலைத்திருக்கின்றன.

(பிரபஞ்ச உற்பத்தியிலும் திதியிலும் தாம் அசங்கமாக விருப்பதையருளிச்செய்த பகவான் இப்போது பிரளயகாலத்தும் தமக்கு பிரபஞ்சத்தோடு சம்பந்தமில்லை யென்பதை யருளிச்செய்கின்றார்.)

ஏ பார்த்த! இங்கு காணப்படும் ஆகாச முதலான எல்லாப் பதார்த்தங்களும் பிரளயகாலத்தில் முக்குண சம்பந்தமான எனது பிரகிருதியினிடத்தே இலயமாகும். சிருட்டிகாலத்தில் அவை மறுபடி அப்பிரகிருதியிலிருந்தே கிரமப்படியுற்பத்தியாகும். ஆகையால் உண்மையாகப் பார்க்கில் சர்வஞ்ஞனை நானே பிரபஞ்சமனைத்தும் சிருட்டித்து இரட்சித்து அழிக்கின்றேன்.

(இப்போது பகவான் சிருட்டியாதிகளைச் செய்வதால் தமக்குப் பந்தமுண்டாகாதெனை அருளிச் செய்கின்றார்.)

ஏ! அர்ச்சுன! நான் பலன்களில் இச்சை வைத்தல், வெறுத்தல் என்கிற வேண்டல் வேண்டாமையின்றி மித்தியாவடிவமான இச்சிருஷ்டியாதி கிருத்தியங்களைச் செய்கின்றேன். ஆகையால் அக்கருமங்கள் என்னைப் பொருந்தா. சிலந்திப் பூச்சி தன் வாயால் நூல் நூற்று அந்நூலால் தான் கட்டுண்பதுபோல் பலன்களை யடையக்கருதி கர்மங்களைச் செய்வோர் அக்கர்மங்களால் பந்திக்கப்பட்டு அக்கர்ம பலன்களில் சிக்கி யுழலாநிற்பர்.

[ஈசுவரனது மாயையாகிய பிரகிருதியே இப்பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து சகல கிருத்தியங்களையும் செய்கிறது. சூரியன் ஒரு சிந்தனையுமின்றி யிருக்க, அதன் பிரகாசத்தால் நீரிலுள்ள தாமரை மலர்வதும், தரையிலுள்ள தாமரை உலர்ந்தழிவதும், நீர் ஆவியாக மாறுவதும், ஈரவேஷ்டி உலர்வதும், கல்லில் சூடேறுவதுமாகிய பல விகாரங்கள் (அந்தந்த வஸ்துவின் நிலைமைக்குத் தக்கவாறு) உண்டாவதுபோல, ஈஸ்வர சந்நிதான விசேஷத்தால் பிரகிருதியிடம் சிருஷ்டியாதி கிருத்தியங்கள் நிகழ்கின்றன. சீவன்கள் அவரவர் கர்மத்திற்குத் தக்கவாறு சுகதுக்கங்களை யனுபவிக்கிறார்கள். இதனால் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்வதால் அரசனுக்குப் பாவபுண்ணியம் சித்திக்காததுபோல், பஞ்சகிருத்தியங்களால் ஈசுவரனுக்கு எவ்விதப் பந்தமும் நேராது. ஈசுவரன் சூரியனைப்போல் பிரகாசித்துக்கொண்டிருப்பதை யன்றி ஒரு தொழிலும் செய்பவனல்ல. அவனிடம் செய்கையும் செய்விக்கையுமில்லை.

" செய்கையும் செய்விக்கையு மற்றிருக்கும் காந்தச்
சிலைமலைமுன் அயங்கள்வந்து சேட்டிக்கு மாபோல்
செய்கையும் செய்விக்கையு மற்றிருக்கு மென்முன்
சடமான வுலகமெலாம் சேட்டை செய்யும்
* * * * " (கைவல்யம்)

" ஐவகைய சத்தியினு லைந்தொழிலு மாருயிர்க்காய்ச்
செய்யாமற் செய்யும் சிவம்"
" வாளிரவி சந்நிதியின் மரைமலர்ந்து வாடிடினும்
வாளிரவிக் குண்டோ மயல்" (பதியியல்)

(இப்போது பகவான் அவிவேகிகள் தம் உண்மையை யுணராது சாதாரண மனிதனாக எண்ணுவதைப்பற்றி அருளிச் செய்கின்றார்.)

ஏ பார்த்த! சச்சிதானந்த சொரூபியாகவும், சர்வப் பிராணிகளிடத்தும் ஆன்மரூபமாகவும் உள்ள என்னைக் காலதேச வஸ்து பரிச்சேதமற்ற பரமேசுவரனாக அறியாத அவிவேகிகள், சாதாரண மனிதனென வெண்ணி அவமதிப்பார்கள். அவர்கள் மனதின் கண் ஆசை பொருந்தியவர்களாய்க் கர்மங்களைச் செய்து நரகங்களில் சஞ்சரிக்கத் தக்கவர்களாகிய இராக்கதர் முதலியோராவர்.

(இனி தம்மை யறிந்து பூசிப்போர் இத்தகையோர் என்று பகவான் அருள்கின்றார்.)

விவேக ஞானத்தால் என்னைப் பரிபூரண சொரூபியாகிய பரமேசுரனென உணர்ந்து, மனதை யடக்கிப் புலன் வழிகளில் செல்லவொட்டாது தடுத்து சதா என்னையே ஸ்மரித்துக்கொண்டிருப்போர் தேவர்களாகக் கருதப்பட்டவராவர்.

அவ்வாறு மனவடக்கத்தோடு தங்களைப் பஜிக்கும் புருடர்கள் எவ்விதமாய்ப் பஜிக்கிறார்கள் என்னும் அர்ச்சுனன் சங்கைக்குப் பகவான் விடை யருள்கின்றார்:—

ஏ பார்த்த! காலத்தாலும், இடத்தாலும், வஸ்துவாலும் பரிச்சின்னமாகக் கருதவொண்ணாத என்னை ஞான தரிசனத்தால் அபேதமாகவும், பலவிதமான சொரூப வணக்கங்களால் பேதமாகவும் (அன்னியமாகவும்) ஞான யோகங்களினால் உபாசனை செய்யா நிற்பர். அவர்களது தன்மையைக் கூறுதும் கேட்பாயாக.

[உபாசகர்களாகிய அதிகாரிகள் உத்தமம், மத்திமம், மந்தம் என்ற மூவகையாய்ப் பிரிக்கப்படுவர்.]

1. உத்தம அதிகாரிகள்—மனதை இந்திரியங்களின் வழிச்செல்லவொட்டாது தடுத்து ஒடுக்கி ஞான யோகத்தால் ஈசுவரனை அனந்நியமாக உபாசிப்போர்.

2. மத்திம அதிகாரிகள் — ஈசுவரனை சொரூபமாக (விக்கிரகாதி உருவங்களாக) அன்னியமாக, உபாசிப்பவர்கள். (சரியை கிரியைகளின் வழியாக ஈசுவரனைப் பஜிப்பவர்கள்.)

3. மந்த அதிகாரிகள் — சூரியன், அக்னி முதலிய தெய்வ சொரூபங்களை யுபாசிப்பவர்கள்.

[ஒருவன் சரியையில் ஈசுவரனைத் தனக்கன்னியமான சடவடிவாய்க் கண்டு வணங்குகிறான். கிரியையில் மந்திர பூர்வமாகத் துதிக்கிறான். யோகத்தில் தனக்குள்ளாகவே தரிசிக்கிறான். ஞானேயமானவனே அபேதமாய் இரண்டற்ற நிலையில் (தானதுவான நிலையில்) சாக்ஷாத்கார அனுபவத்தை யடைகிறான்.

“சரிதையிலே யீசன் சடவடிவாய் நின்றான்
கிரியையிலே மந்திரத்திற் கிட்டி—யருகிருந்தா
னானமிலா யோகத்தி லுள்ளொளியா யேநின்றான்.
ஞானமதி னானபி னான்.” (ஞானவிளக்கம்)]

“ஏ பகவான்! இவ்வாறு பல தெய்வங்களை யுபாசிக்கிறார்களே, அந்த அதிகாரிகளனைவரும் ஈசுரனாகிய தங்களையே உபாசிக்கிறார்கள் என்பது எப்படி பொருந்தும்?” என்று அர்ச்சுனன் கேட்ட சங்கைக்கு ஸ்ரீபகவான் விடை யருள்கின்றார்:—

ஏ பார்த்த:— வேதத்தில் கூறப்பட்ட அக்நிஷ்டோமாதி யாகங்களும், எக்ஞங்களும், பிதுர்க்களுக்குச் செய்யும் சிரார்த்தம் முதலியவைகளும், மூவித அக்னிகளும், பிரணவாதி மகாமந்திரங்களும் யாவும் நானே இருக்கின்றேன்.

மேலும் சகல ஜகங்களையும் இரட்சிக்கும் மாதா பிதாவும் பிதாமகனும் நானே. அவரவர்கள் முன் ஜன்மத்தில் செய்த கர்மங்களுக்குத் தக்க சுவர்க்காதி பலன்களை யளிக்கும் தாதாவும் நானே. வேதங்களும் பிரணவமும் நானே. எல்லாரும் அடையும் சுவர்க்காதி பலன்களும் நானே. இருவினையின் வழியே சீவன்களைப் போஷிப்பவனும் நானே. எல்லார்க்கும் தலைவனும், எல்லாப் பிராணிகட்கும் சாக்ஷியா யிருப்புவனும் நானே.

——— (தொடரும்) சீடன்.

நட்பு.

நட்பு என்பது சிநேகிதர் இருவர் அல்லது பலரிடம் குடிகொள்ளும் உள்ளத்தின் நெகிழ்ச்சியாம். இவ்வித நட்பு புன்சிரிப்பு முறுவல் முதலிய வெளிவேடத்தால் காட்டக்கூடியதல்ல. உள்ளத்தின் அன்பாலே நாட்ட வேண்டியது. இதுபற்றியே நமது திருவள்ளுவரும்,

“ முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு ”

என்று திருவாய்மலர்ந்தருளியுள்ளார். ஆதலால் நண்பர்கள் அவசியமாய் உள்ளத்தில் அன்புகொண்டு நடந்துகொள்ளவேண்டும்.

ஒருவன் தீச்செயல்களிற் செல்லும்போது அவ்வாறு செல்லாமற் றடுத்து நல்வழிகளிற் செல்லத் தூண்டுதலும், அவனுக்கு யாதாயினும் கேடுவந்த காலத்தில் அதைத் தடுக்க முயலுதலும், அது முடியாவிடின் அதனால் வருந்துன்பத்தை அவனோடுகூடத் தானும் அனுபவித்தலும், எக்காலத்தும் வேறுபடாதிருத்தலும், ஆகிய இவை முதலிய நற்குணங்களை உடையவனே சிநேகன் ஆவான். மனஒற்றுமை யுடைமையே சிநேக விருத்திக்குக் காரணமாம். பெரியவர்களுடைய சிநேகம் பிறைபோல நாளொரு வண்ணமாக வளர்ந்துகொண்டு வரும். கரும்பு நுனியிலிருந்து தின்பவனுக்கு மேலே தின்னத் தின்னச் சுவையை மிகக் கொடுத்துக் கொண்டு வருவதல்போல நல்லோருடைய சிநேகமும் பழகப்பழக உறுதியையும் மனமகிழ்ச்சியையும் மிகவுங் கொடுத்துக்கொண்டு வரும். இவ்வியல்புடைய சிநேகிதத்தைப் பெறுதல் மிகுந்த அருமையாம்.

ஒருவரோடொருவர் சிநேகஞ் செய்தல், தகாத செயல்கள் காணப்படுமிடத்து இடித்துப் புத்திகூறி நல்வழிப் படுத்துதற்கன்றித் தம்முட் சிரித்து விளையாடுதற்கன்று. கண்டவிடத்து முகமாத்திரம் மலரும்படி சிநேகிப்பது சிநேகமன்று; மனமும் மகிழும்படிசிநேகிப்பதே சிநேகமாகும்.

ஒருவருடைக் குணங்களை ஆராயாமற் சிநேகஞ் செய்தலாகாது, ஆபத்துக்காலத்தில் கைவிடுவோரையும், தமக்குப் பிரயோசனமுள்ள காலத்தில் வந்து கூடி, அது இல்லாத காலத்தில் விட்டு நீங்குவோரையும், மூடரையும், சொல்லொன்று செயலொன்று யிருப்போரையும் சிநேகஞ் செய்தலாகாது. இதனாலன்றோ ஒளவையாரும் “நல்லிணக்கமல்ல தல்லற் படுத்தும்” என்று அருளிச் செய்தார்.

இன்பதுன்பங்கள் மனத்தில் அடைபட்டுக் கிடப்பதும் ஒரு பிணி.

யாம். "மனக்கவலை பலக்குறைவு" மனத்தில் அடையப்பட்டிருக்கும் இன்பதுன்பங்களை வெளிப்படுத்துவதே மனநோய்க்குப் பரமௌஷதம். ஆயினும் இவைகளை வெளிப்படுத்துதற்கு ஒரு போக்கு வீடு வேண்டும். அங்ஙனம் போக்குவீடு ஆகின்றவன் நண்பனே — உண்மை நண்பனிடத்தில் உள்ளத்திலுள்ளதை உரைத்துக் கொள்வதால் நன்மைகள் இரண்டுளவாம். துன்பம் பாதியாகக் குறையும். உவகை ஒன்றிரண்டாம் நண்பனே எதற்கும் ஏற்ற வெற்றி சூழ்ச்சி சொல்லுவதற் குரியவன்.

நீர் சேர்ந்தபாலை நெருப்பில் வைத்துக் காய்ச்சும்பொழுது நீர் சுவறுகின்றது; அதுகண்டு தன்னுடன் சேர்ந்த நீருக்கு நேர்ந்த துன்பத்தை சகிக்காது கலத்தின்மேல் பொங்கி அக்னிப்பிரவேசஞ்செய்ய முயலுகின்றது. அப்பொழுது சிறிது நீரைக் கலத்தில் தெளித்தால் 'நம் நண்பன் உயிர்த்தெழுந்தான்' என்று அந்தப்பால் அடங்குகின்றது. அதுபோலவே நேயன் சாமானியனானாலும் அவனுக்கு ஒரு துன்பம் வந்துற்றபொழுது உண்மை சிநேகிதன் அவனுக்குத் துணை செய்யாமலிரான்.

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்று நாயனார் கூறினார்.

அதாவது ஆடை யவிழ்ந்தால் கையானது எவ்விதமாகத் துரிதத்துடன் அவ்வாடையைக் கட்டிவிடுகிறதோ, அதுபோல உண்மை நண்பன் தீங்கு வந்த காலத்து நண்பனைக் காப்பாற்றவே வகை தேடுவான்.

அற்றகுளத்தி னறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வா ருறவல்லர் — அக்குளத்தில்
கொட்டியு மாம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவா ருறவு.

என்பதுபோல், இழிந்தோர் பறவைகள்போல் தம் நண்பரின் செல்வமும் இன்பமும் அனுபவித்து அவர் வறுமையும் துன்பமும் அடைந்த காலத்தில் அவரைவிட்டு நீங்கிப்போய்விடுவர். உயர்ந்தோரோ, கொட்டியும் ஆம்பலும்போலத் தமது நண்பர் துன்புற்றகாலத்தில் அவரோடு துன்பத்தை அனுபவித்து அவரைவிட்டு நீங்காதிருப்பர்.

பழுக்கக் காய்ந்த இரும்போடு நீர்த்துளி சேருமாயின் நீர் என்னும் பெயரும் அழிகின்றது. அந்நீர்த்துளி தாமரையிலையின்மீது தங்கியபொழுது அது முத்துப்போலத் தோன்றுகின்றது. மற்றும் அந்நீர்த்துளியே கடலிலுள்ள இப்பியின் வாயில் விழுமானால் அது அரசரும் விரும்பிக்கொள்ளும் அரிய விலையுள்ள ஆணிமுத்தாகின்றது. இவ்வாறே நமது நட்பை யாரிடம் வைக்கிறோமோ அதற்குத் தக்க பலனே யுண்டாகும். இதற்காகவே "சேரிட மறிந்து சேர்" என்றனர் ஆன்றோர். அதம, மத்திம, உத்தமர்களுடைய சிநேகமும் இதுபோலத்தா னிருக்கின்றது. மூடருடைய சிநேகம் எல்லாத் தீமைகளையும் உண்டாக்குதலாலும்,

அறிவிற்சிறந்த பெரியாருடைய சிநேகம் எல்லா நன்மைகளையும் உண்டாக்குதலாலும் சிறியாரோடு சிநேகஞ் செய்தலைக் கைவிட்டுப் பெரியாரோடு சிநேகஞ் செய்தல் வேண்டும். இச்சிநேகத்தால் உடையானுக்கு எவ்வகைப்பட்ட இடர்களும் நீங்கி, எல்லா நன்மைகளும் தாமே உண்டாகும்.

"அழிவி னவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்
அல்ல லுழப்பதாம் நட்பு"

எனவும் திருவள்ளுவர் கூறினார்.

ஆகையால் மானிடராகப் பிறந்த நாமெல்லோரும் நட்பினராய் ஒத்து வாழ்வோமென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

தி. போ. மாணிக்கவாசகம், வரகநேரி.

வாசகசாலைகள்.

ஒரு தேசமோ அல்லது ஒரு மனித வகுப்பினரோ ஸகல வழிகளிலும் முன்னேற்றமடைந்து சீர்பெற்று விளங்குவதற்கு அவர்கள் அறிவையடையவேண்டிய தவசியம். அதுமட்டுமல்ல; அவர்கள் தங்கள் அறிவை மென்மேலும் விசாலப்படுத்திக் கொள்வதும் அவசியமே. இப்படி ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து அதை விருத்தியாக்கும்படி செய்ய அனேக சாதனங்களுண்டு. அச்சாதனங்களில் பொது வாசகசாலைகளை ஏற்படுத்துவது ஒன்றாகும்.

வாசகசாலை யென்பது அறிவை யூட்டும் நூல்களும், பலவிதமான புஸ்தகங்களும், முக்யமான தேசப் பத்திரிகைகளும் கொண்டு பொது ஜனங்களின் உபயோகத்திற்கு ஏற்படுத்தப்படு மோரிடம். சாதாரணமாக புஸ்தகங்களென்றால் எல்லாவித புஸ்தகங்களும் அடங்கி யிருப்ப தவசியம். தாய்ப் பாஷையிலுள்ள புஸ்தகங்களும், ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய வேறு பாஷைகளிலுள்ள புஸ்தகங்களும் இருக்கவேண்டும். இன்னும், வாசகசாலை யென்றால், குறைந்தது ஒன்று இரண்டு பத்திரிகைகளையாவது வரவழைத்தல் அவசியம்.

இப்பேர்ப்பட்ட வாசகசாலையை நடத்துவது ஒருவரால் எளிதில் முடியாது. ஏனெனில், நடத்துபவர் மிக்க செல்வவந்தரா யிருந்தாலன்றி, புஸ்தகங்களை வாங்குவதற்குப் பணம் செலவழிப்பது கஷ்டமாயிருக்கும். ஆகையால் நான்கு அல்லது ஐந்துபேர்கள் கூட்டுறவாகச் சேர்ந்துகொண்டு பொதுஜன நன்மைக்காக வாசகசாலையை ஏற்படுத்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தங்களாலியன்றவாறு பணம் கொடுத்து புஸ்தகங்களை வாங்கவேண்டும். முக்யமான பத்திரிகைகளையும் வரவழைப்ப தவசியம். வாசகசாலையைக் காலை மாலை ஆகிய இருவேளைகளிலும் திறந்து வைக்கலாம். குறைந்தது, மாலை சுமார் 3 - மணிமுதல் 8 - மணி வரையில் திறந்து வைப்பது அவசியம். ஏனெனில், அனேகமாய் மனிதர்கள் அவ்வேளைகளில்தான் ஒழிவுபெற்று வாசகசாலைக்கு

வருவார்கள். இப்படி ஒரு நல்ல வாசகசாலையை ஸ்தாபித்து விட்டால் அதனால் பொது ஜனங்களுக்கு எவ்வளவோ நன்மை யுண்டு.

சில இடங்களில் வாசகசாலையின் பிரயோஜனத்தை யடைவதற்கு மாதம் மாதம் சந்தாத்தொகை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். சந்தாத்தொகை செலுத்தும் அங்கத்தினர்தான் வாசகசாலைக்குச் செல்லலாம் என்று விதி ஏற்படுத்துகிறார்கள். இந்த ஏற்பாடு வாசகசாலையின் அபிவிருத்திக்கு ஏதுவாயிருந்தாலும், தற்காலத்தில் சந்தாத்தொகை என்றேற்படுத்திவிட்டால் ஜனங்கள் சேருவது கஷ்டம். காசுகொடுத்து வாசகசாலையின் அங்கத்தினராகச் சேரப் பிரியப்படார்கள். ஆகையால், பொதுஜன நன்மையையே லக்ஷியமாகக்கொண்டு 'இலவச வாசகசாலைகளையே' ஏற்படுத்துவது தேசாபிமானிகளான தனவந்தர் செய்யத்தக்க காரியம்.

சில இடங்களில் இவ்வளவு உத்தமமாக, சிலர் கூட்டுறவாகச் சேர்ந்துகொண்டு புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் வரவழைத்து வாசகசாலையை யேற்படுத்துவது கஷ்டமான காரியமா யிருக்கலாம். அப்படி இருந்தாலும், ஒருவரே தம்முடைய செலவில் ஒன்றிரண்டு தினசரிப் பத்திரிகைகளையும் வாரமாதாந்தரப் பத்திரிகைகளையும் மட்டும் தருவித்து அவைகளைக்கொண்டு வாசகசாலை ஏற்படுத்திப் பொதுஜன நன்மையைச் செய்வது மிகவும் சிலாக்யமே. "ஒன்றுமில்லாததற்குக் கொஞ்சமிருந்தாலும் நல்லதே" (Something is better than nothing) என்னும் பழமொழிப் பிரகாரம், கையில் இருப்பதைக் கொண்டு பொது ஜன நன்மைக்காக வாசகசாலைகள் ஏற்படுத்துவது மிகவும் நல்லதே.

பத்திரிகைகளைப்பற்றி ஒரு விஷயம் இவ்விடம் சொல்லவேண்டியிருக்கிறது. அனேக வாசகசாலைகளில் சீமையிலிருந்து வரும் (Punch) 'பஞ்ச்' முதலிய அதிகப் பிரயோஜனமில்லாத பத்திரிகைகள் அதிகமாக வரவழைக்கப்படுகின்றனவே யன்றி, நம் நாட்டில் வெளியிடப்படும் பத்திரிகைகள் ஆதரிக்கப்படுவதில்லை. இதேனோ வீண்மயக்கம்! நமது நாட்டிலேயே, எவ்வளவோ அறிவை யளிக்கும் சிறந்த வார மாதாந்திரப் பத்திரிகைகளிருக்கும்போது, நிரந்தரமான விஷயமொன்றுமே அடங்கி யில்லாத (Punch) முதலிய மேல் நாட்டுப் பத்திரிகைகளை மட்டும் வரவழைப்பது அழகல்ல. நம் நாட்டு தேசியபத்திரிகைகளை ஆதரிப்பதே மிகவும் அவசியம். ஜனங்களுக்காகப் பாடுபட்டு உழைத்து வரும் பத்திரிகைகளை நாம் ஆதரிக்கவேண்டாமா? உதாரணமாக, "ஹிந்து," "ஸ்வராஜ்யா," "சுதேசமித்திரன்" முதலிய பத்திரிகைகளை நாம் ஆதரிக்கலாம். ராஜீய விஷயங்களிலே கலக்காது, ஜனங்களினுடைய க்ஷேமத்தையும் முன்னேற்றத்தையுமே கருதி, ஜனாசாரம், மதம் முதலிய விஷயங்களில் பாடுபட்டு உழைத்துவரும் நமது "ஆனந்தபோதினி"யைப் போன்ற பத்திரிகைகள் ஆதரிக்கப்படவேண்டியது மிகவும் அவசியம்.

நிற்க, இப்பேர்ப்பட்ட வாசகசாலைகளின் பிரயோஜனங்களைப்பற்றிக் கொஞ்சம் கவனிப்போம். முதல் முதல் ஒரு வாசகசாலை இருப்பதினால் ஜனங்களுக்கு கல்வி அபிவிருத்தி உண்டாகிறது. அடிக்கடிபோய்ப் பலவித புஸ்தகங்களை எடுத்துப் படிப்பதனால் பற்பல விஷயங்களை அறிந்து ஞானம், விவேகம், அறிவு முதலியவைகளை விருத்திசெய்துகொள்ள ஏது ஏற்படுகிறது. ஆகவே, பொது ஜனங்களின் கல்வி விருத்தியடைகிறது. இரண்டாவதாக, பத்திரிகைகளைப் படிப்பதனால் உலகத்தில் நடக்கும் விவகாரங்களை அறிகிறோம். மனிதவாழ்க்கையின் பல துறைகளிலும் ஏற்படும் மாறுதல்களும், சீர்திருத்தங்களும், நாகரீக அபிவிருத்தியும் நமக்குத் தெரியவருகின்றன. அதனால், நாமும் நம்மை முன்னேற்றிக்கொள்ள வேண்டி அவைகளில் வேண்டியவைகளைக் கைக்கொண்டு அனுஷ்டிக்கிறோம். இதுமட்டுமல்ல. பெரிய ராஜீய மதவிஷயங்களில் பல பிரமுகர்களினுடைய அபிப்பிராயங்களும், விவாதங்களும் நமக்குத் தெரிய ஏதுவுண்டாகிறது. இப்படியாக, நாம் இருந்த விடத்திலேயே இருந்துகொண்டு, வாசகசாலையி னுதவியால், கல்வி, அறிவு, ஞானம், விவேகம் முதலியவைகளை வேண்டுமளவும் விருத்தி செய்துகொள்வதுமன்றி, உலக நடவடிக்கைகளை யெல்லாம் அவ்வப்பொழுது அறிந்துகொண்டிருக்கிறோம். இப்படி வாசகசாலையானது ஜனங்களை எல்லா விஷயங்களிலும் முன்னேற்றமடையும்படி செய்கிறது. ஒவ்வொரு பட்டணம்தோறும், கிராமந்தோறும் இப்பேர்ப்பட்ட வாசகசாலைகள் இருந்தால், நமது நாட்டிற்கே ஒரு பெரிய நன்மை. நமது நாடு முழுதும் ஸகல விஷயங்களிலும் முன்னேற்றமடைந்து, மேலான ஸ்திதியைப் பெற்று விளங்குமென்பதற்கையமில்லை.

R. நாராயணஸ்வாமி, தஞ்சாவூர்.

குறிப்பு:—நமது நண்பர் கூறியபடி வாசகசாலைகளுக்குப் பொருள் வேண்டிய தவசியமே. பணமில்லாமல் எக்காரியமும் நடவாது. பத்திரிகைகளை வரவழைக்கவும் புத்தகங்கள் வாங்கவும் பணம் வேண்டும். ஒருவரே அதைச் சமாளிக்க முன் வருவது கடினம். பணமிருந்தால் மனமிராது. மனமிருப்பவரிடம் பணமிராது. அதிலும் நம் நாட்டிலுள்ள செல்வவந்தரில் பெரும்பாலர் ஒரு பெரிய அதிகாரி வருவதாயின் அவரை வரவேற்க 500 ரூபாய் வேண்டுமாயினும் வலியக் கொடுத்துத் தமது கரத்தால் அந்த அதிகாரிக்குப் பூமாலை சூட்டும் கௌரவம் கிடைத்தால் சொர்க்கமே கிடைத்ததாக மகிழ்வார்கள். இன்னும் ஒரு பட்டம் கிடைப்பதாயின் ஆயிரக்கணக்காய்க் கொடுப்பார்கள். தாய் நாட்டின் பொதுநலத்திற்கென்று கேட்டால் அது பயனற்ற செலவெனக் கருதுவார்கள்.

ஆகையால் தேசமுன்னேற்றத்தில் அக்கரையுடைய அபிமானிகள் சிலர் ஒன்றுசேர்ந்து நிலையான சந்தாதாரர்களாய் இருந்து வாசகசாலையைத் தாபித்து நடத்தவேண்டும். அவர்களுக்கு அங்குள்ள புத்தகங்களை ஒவ்வொன்றாக வீட்டிற்கு எடுத்துப்போய் வாசிப்பதுபோன்ற சில உரிமை

கள் இருக்கவேண்டும். வாசகசாலைக்கு வந்து புத்தகங்களையோ பத்திரிகைகளையோ வாசித்துப்போக விரும்புகிறவர்களுக்கு சொல்ப சந்தா ஏற்படுத்தவேண்டும்.

இவ்வளவேனும் நடந்தாலும் அதில் சேர்ந்திருக்கும் கூட்டத்தாரின் சுயநலமாகவே முடிகிறது. நம் தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடவேண்டுமாயின்,

1. தினம் மாலை 6-மணிக்குமேல் ஒரு மணி நேரமாவது கைத்தொழிலாளிகள், ஏழைகள் முதலிய பாமரர்க்குக் கல்வி இலவசமாய்க் கற்பிக்கவேண்டும். கற்பிக்கும் தொழிலைத் தேசாபிமானமுடைய வாசகசாலை அவயவிகள் வாரமொரு முறை ஒவ்வொருவர் முறையாய் ஏற்றுக் கொள்ளலாம்.

2. பாமரர்களுக்குப் பத்திரிகையிலுள்ள முக்கிய விஷயங்களை வாசித்துக்காட்டி அவர்களுக்குத்தேச பக்தியும், நம் தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கு நாம் செய்யவேண்டிய தின்னதென்ற விஷய வுணர்ச்சியும் உண்டாகுமாறு செய்யவேண்டும்.

இத்தகைய காரியங்களைச் செய்தால்தான் வாசகசாலைத் தாபித்து நடத்துவது பொதுநல ஊழியமாகிய தேசத் தொண்டாகும்.

பத்திரிகாசிரியர்.

அம்பாலிகை அல்லது அதிசய மரணம்.

(238-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆனந்தஸிங் பவானியை நோக்கி "பயப்படாதே. சந்தடி செய்யாமல் தரையில் உட்கார். நான் சங்கதி தெரிந்து வருகிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான். அவன் மடியிலிருந்த தன் கைத்துப்பாக்கியைக் கையில் பிடித்துக்கொண்டு மெதுவாய் அம்மனிதனிருக்குமிடத்தை நோக்கிச் சென்றான். கிட்டே செல்லச் செல்ல அம்மனிதன் எள்ளளவுகூட அசைவின்றி யிருப்பதாய்த் தெரிந்தது. ஆனந்தஸிங் ஒரு சமயம் இது எதிரிகளின் சதியாலோசனையா யிருக்கக் கூடுமென்று மிக்க எச்சரிக்கையோடு இன்னும் நெருங்கினான். அப்போதும் அம்மனிதன் அசையவில்லை. சற்று சந்தடிசெய்து பார்த்தான். அப்போதும் அவன் அசையவில்லை. கொஞ்சம் அதிகமாகவும் சத்தம்செய்து பார்த்தான். அவன் அசையவேயில்லை. கடைசியில் அருகிற்சென்று அவன் தோளைப் பற்றினான். அப்போதும் அசையவில்லை. குனிந்து அவன் முகத்தைப் பார்த்தான். உடனே சங்கதி தெரிந்துவிட்டது. அவன் பிணமாயிருக்கிறான். அதோடு அங்கு தோய்ந்திருந்த இரத்தக் கறைகளால் அவன் கொல்லப்பட்டான் என்றும் தெரிந்துகொண்டான்.

4-வது அத்தியாயம்.

ஆனந்தஸிங் முன் யோசனை யுடையவனாதலால் சவத்தை யப்படியே அசைக்காமல் விட்டுவிட்டுத் திரும்பி பவானியிடம் வந்தான். அவள் "அய்யோ அந்த ஆள் இன்னும் அங்கேயே யிருக்கிறானே" யென்றாள்.

ஆனந்த:—"ஆம் அது சவம்" என்றான்.

அதைக் கேட்டதே யவள் திடுக்கிட்டு "ஐயோ!" என்றாள்.

ஆனந்த:—"வா! அவன் உனக்குத் தெரிந்தவனா பார்ப்போம்" என்று அவளை யழைத்துக்கொண்டு சென்றான்.

இருவரும் சவம் இருக்குமிடத்திற்குச் சென்றதும் ஆனந்தஸிங் சவத்தின் முகத்தை திருப்பிக்காட்டி இவன் யார் தெரிகிறதாபார் என்றான். பவானி யம்முகத்தைக் கண்டதே அலறிப் பின்னிடைந்தாள். ஆனந்தஸிங் "அவன் யார் தெரிகிறதா?" என்று கேட்டான். அம்மாது ஆம் தெரியும். இவன் பெயர் அச்சுதன் இவன் என் தாயார் இறந்தபோது மரணசாசனம் எழுதிய லாயருடைய குமாஸ்தா" என்றாள்.

ஆனந்த:—கறுப்பண்ணன் இக்கொலையால் அனுகூலமடைவானல்லவா?

பவானி:—"ஆம் அப்படித்தான். அதோ பார்" என்று இறந்தவன் தேகத்தில் காயம்பட்டிருந்த விடத்தைக் காட்டினாள்.

அவன் அணிந்திருந்த உட்சட்டையின் பொத்தான்கள் கழற்றப்பட்டிருந்தன. அவன் ஹிருதயத்தில் ஒரு சன்னமான ஈட்டியால் நேராய்க் குத்தப்பட்டிருந்தது.

பவானி "இது மலையாளத்தான் வேலை" என்றாள்.

ஆன:—அப்படியா?

பவானி:—"ஆம்" என்றாள்.

ஆனந்தஸிங் அதன் உளவு ஏதாவது அகப்படுகிறதாவென்று கவனித்தான். அதற்குள் அம்மாது, "அந்தோ சவப்பெட்டியிலிருக்கும் உயிர்ப் பிராணியை மறந்துவிட்டாயே" என்றாள்.

ஆனந்தஸிங் ஆம் ஆம் என்று உடனே அவளை யழைத்துக்கொண்டு அம்பாலிகையின் சவக்குழிக்குச் சென்றான்.

இருவரும் அங்கு சென்று நின்றதும் ஆனந்தஸிங் சவக்குழியின் கதவைத் தொட்டுப் பார்த்தான். அது பூட்டப்படாமலிருந்தது. அதைக் கண்டதே மிக்க வியப்படைந்து, "ஆ! காரியம் மிஞ்சிவிட்டது" என்றான். பவானி, "என்ன? என்ன?" என்றாள்.

ஆனந்தஸிங் "வந்துபார்" என்று கூறிக்கொண்டே கதவைத் திறந்து உள்ளே சென்று தன்னிடமிருந்த இராந்தலைத் திறந்தான். இவர்கள் கண்முன் சவப்பெட்டி யிருந்தது.

பவானி சந்தோஷமடைந்து "ஆ பெட்டி யிதோ விருக்கிறது" என்று ஆவலோடு கூறினாள்.

ஆனந்த:—"இரு பார்ப்போம்" என்றான். அவன் மனதில் சவப்பெட்டியிருந்தாலும் உள்ளே யொன்றுமிராது என்றே எண்ணிக்கொண்டு ஒரு கையால் அப் பெட்டியை யிழுத்தான். அது பளுவா யிருப்பதைக் கண்டதே யவனும் மிக்க வியப்படைந்துவிட்டான்.

பெட்டியை மெதுவாய் இழுத்துவந்து இராந்தலைப் பவானியிட மளித்து தன்னிடமிருந்த ஒரு திருப்புளியை யெடுத்து பெட்டியின் மேல் பலகையைக் கழற்றினான். இருவரும் உடனே உள்ளே யிருந்த உருவத்தை நோக்கினார்கள். உடனே இருவரும் வீறிட்டலறி "இதென்ன அதிசய கோரம்" என்றார்கள்.

அப்பெட்டியில் ஒரு பெண்ணின் சவமே யிருந்தது. ஆனால் அது முகம் புகைநிறமடைந்து மிக்க அகோர மாறுதலடைந்திருந்தது. தலைமயிர்மட்டும் அம்பாலிகையின் கூந்தலைப்போலவே செழித்து வளர்ந்திருந்தது.

பவானி ஆனந்தலிங்கின் பக்கத்திலிருந்து அவ்வுருவத்தை யுற்றுப் பார்த்து "இது இறந்த தேகம்தானே?" என்றாள்.

ஆனந்த:—ஆம்.

பவானி:—"அய்யோ! இவள் சவப் பெட்டிக்குள் இருக்கும்போதே ஸ்மரணை வந்து விட்டது. காற்றில்லாததால் மூச்சு திணறி மிக்க பரிதாபமாய் இறந்துபோ யிருக்கிறாள்" என்றான்.

ஆனந்த:—இவ்வளவு விகாரம் இதற்குள் எப்படி யுண்டாய்விட்டது.

பவானி:—பெட்டியிலிருக்கும்போதே ஸ்மரணை வந்துவிட்டதால் மூச்சு விட முடியாமல் இரத்தம் முகத்திலேறி யங்கேயே நின்றுவிட்டது.

ஆனந்த:—ஒருக்காலுமில்லை. இவள் செத்து ஒருவாரமாய் விட்டது.

பவானி:—ஒருகாலுமில்லை.

ஆனந்த:—இல்லை நான் கூறுவது உண்மை.

பவானி:—அப்படியாயின் இது அந்த மலையாளத்தான் செய்த சாமார்த்தியம்.

ஆனந்த:—இது அம்பாலிகையின் சவமல்ல.

பவானி:—இல்லை. ஒருக்காலுமில்லை நான் பிரமாணிக்கம் செய்வேன். இது அவளுடைய தேகமே.

ஆனந்தலிங் அதைப்பற்றி யொன்றும் கூறாமல் "சரி இனி நமக்கு இங்கே ஒரு வேலையுமில்லை. வா போவோம்" என்று கூறிவிட்டுச் சவப் பெட்டியின் மேல்மூடியை முன்போலவே ஆணிவைத்து தைத்து அதை யிருந்த விடத்தில் வைத்துவிட்டு சவக்குழியைவிட்டு வெளிவந்து கதவைப் பழையபடியே மூடிவிட்டான்.

பிறகு பவானியை நோக்கி "நீ யிங்கேயே நின்றுகொண்டிரு. ஓடி இதை விட்டு நகராதே. நான் வருமட்டும் இங்கேயே யிரு பத்திரம்" என்றான்.

பவானிக்கு ஒன்றும் விளங்கவில்லை யாதலால் "என் என்னை யிங்கேயே நிற்கச் சொல்கிறாய்?" என்றான். (தொடரும்)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

ஒரு கற்புள்ள மாது.

ராமநாதபுரம் ஜில்லா மானாமதுரைத் தாலூக்கா ஆண்டு கொண்டான் என்ற கிராமத்தில் பள் அல்லது குடும்பன் என்ற சாதியைச் சேர்ந்த கறுப்பனென்பவன் தனது மனைவியான பெரிய கறுப்பி என்பவள் வியபி சாரம் செய்துவிட்டதாக ஒருவன் வார்த்தையைக்கேட்டு அவளை வெட்டப் போனான். அப்போது அவள் சுற்றத்தாரும் பிறரும் நூற்றுக் கணக்கானவர் கூட்டம் கூடி விசாரித்தார்கள்; அவள் வியபிசாரம் பண்ணினதே யில்லை யென்று பஞ்சாயத்தார் முன்னிலையில் சத்தியமாகக் கூறினான். அதைக் கணவன் அங்கீகரியாது கொழுவை அக்கினியில் பழுக்கக் காய்ச்சி அந்தக் காய்ந்த கொழுவை எடுத்துக் கையில் கொடுத்தால்தான் நம்புவேன்; இல்லாவிட்டால் இவளை வெட்டுவேன் என்று கூறினான்; அவள் அப்படியே செய்வேனென்று பஞ்சாயத்தார்கள் முன் நெருப்பில் இரும்புக் கொழுவைக் காய்ச்சிக் கையிலெடுத்துக் கொண்டுவந்து கணவன் கையில் கொடுத்தாள். அவன் அதன் சூட்டைச் சகிக்க சக்தியில்லாதவனாய் பயந்து வாங்கவில்லை. அவன் மனைவியைப் பொதுஜனங்கள் யாவரும் பூசித்து அவளைச் சந்திரமதி யென்று போற்றினார்கள். (இ-சா.)

குறிப்பு :—இத்தகைய கற்புடைய மாதர்கள் இப்போதும் நம் நாட்டி லில்லாமலில்லை. சில வருடங்களுக்குமுன் வட ஆற்காடு ஜில்லாவில் ஒரு உத்தமி காயும் எண்ணெயில் கைதோய்த்திருக்கிறாள். கற்பின் மகிமைக்கு அளவில்லை யென்பதை நம் நாட்டுச் சகோதரிகள் மறக்கலாகாது.

பத்திரிகாசிரியர்.

பகிரங்கப் புத்தகாலயம்.

தஞ்சாவூர் அரண்மனையிலுள்ள புத்தகாலயம் பதினாறாம் நூற்றாண்டின் பிற்பாகத்தில் நாய்க்க அரசர்கள் ஆண்டகாலத்தில் தாபிக்கப்பட்டது. அதற்கு "தஞ்சாவூர் சரபோஜிமகாராஜா சரஸ்வதி மஹால் புத்தகாலயம்" என்று பெயர். அது சரபோஜிமகாராஜாவின் உருவச்சிலை அமைக்கப் பட்டிருக்கும் நாய்க்கர் தர்பார் ஹாலுக்கு எதிரிலிருக்கிறது.

இப்புத்தகாலயத்தில் ஓலையிலும் கடிதத்திலும் எழுதியவைகளாக சுமார் இருபத்தையாயிரம் நூல்கள் இருக்கின்றன. இவை தேவநாகரி, நந்திநாகரி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், கிரந்தம், வங்காளி, உரியா பாஷைகளில் இருக்கின்றன. இவற்றில் ஏறக்குறைய எல்லாவித சாத்திரங்களைப்பற்றிய நூல்களும் இருக்கின்றன. பெரும்பாலான நூல்கள் வடமொழியிலேயே யுள்ளன. இவையன்றி 5000 ஆங்கிலம், பிரன்சு, ஜர்மன், லாடின், கிரீக், இடலி பாஷைப் புத்தகங்கள் இருக்கின்றன. அவைகள் 19-வது நூற்றாண்டின் முற்பாதியில் மேல் நாட்டில் பிரசுரிக்கப்பட்டவை. இவையன்றி விசேஷமான தேச விஷயங்களைப்பற்றிய அச்சுப் பிரதிகளும், சித்திரப்படங்களும் சேகரம்செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. பூர்வீகத்திலேயே நம் நாட்டில் இத்தகைய விவகாரங்களுண்டாகி யிருந்தன.

உலகிலுள்ள பெரிய வாசக சாலைகள்.

இங்கிலாந்திலுள்ள பிரிடிஷ் பொருட் காட்சிச்சாலையிலிருக்கும் வாசகசாலையில் 40 இலட்சம் புத்தகங்களிருக்கின்றன.

பாரிஸிலுள்ள ஜாதீய வாசகசாலையில்— 30 இலட்சம் புத்தகங்களுள.

அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் வாஷிங்டன் நகரிலுள்ள காங்கிரஸ் வாசகசாலையில் 25 இலட்சம் புத்தகங்களிருக்கின்றன.

“ஆனந்தபோதினி” பஞ்சாங்கம்.

ருத்ரோத்காரி௵ மாசிமீ—கலி 5025-சாலிவாகனம் 1846
பசலி 1333—கோல்லம் 1098-99—ஹிஜரி 1342
இங்கிலீஷ் 1924௵ பிப்ரவரிமீ—மார்ச்சுமீ

மாசிமீ	பிப்ரவரி	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	13	புத	அ20-43	※கிரு37-0	அ37-0சித்	கிருத்திகை
2	14	வியா	நவ26-53	ரோ44-0	மர60	மத்வநவமி, ஸ்ரீமதாநந்தர் தீர்த்தம்
3	15	வெ	தச32-8	மிரு50-13	சித்60	நாமகரணம் காதுகுத்த
4	16	சனி	ஏ36-13	திரு55-13	சித்60	மத்வசர்வ ஏகாதசி
5	17	ஞா	து38-48	புன58-48	சித்60	பீஷ்மதுவாதசி
6	18	திங்	திர39-53	பூச60	சித்60	பிரதோஷம், சர்வ முகூர்த்தம்
7	19	செவ்	சது39-25	பூச0-50	சித்60	மீஞயனம் நா-52-0
8	20	புத	○37-40	ஆயி1-23	சித்60	மாசிமகம், பௌர்ணமி
9	21	வியா	பிர34-40	மக0-38 பூர58-48	அ0-38சித்	மாசுபகுளம்
10	22	வெ	துதி30-25	உத்56-3	சித்56-3அ	தானியம் வாங்க, சர்வ [முகூர்த்தம்
11	23	சனி	திரி25-40	அஸ்52-38	மர60	
12	24	ஞா	சது20-18	சித்48-53	சித்60	
13	25	திங்	பஞ்14-43	சுவா45-3	அ45-3சித்	
14	26	செவ்	சஷ்8-55	விசா41-33	ம41-33சி	
15	27	புத	சப்3-25 அஷ்58-0	அனு37-30	சித்60	
16	28	வியா	நவ53-5	கேட்34-10	பி34-10சி	
17	29	வெ	தச48-35	மூல31-13	அ31-13பி	
18	1924௵ மார்ச்சுமீ 1	சனி	ஏ44-43	பூரா28-53	சித்60	
19	2	ஞா	து41-33	உத்27-13	அமி60	
20	3	திங்	திர39-13	திரு26-20	அ26-20சி	மஹா சிவராத்திரி
21	4	செவ்	சது37-53	அவி26-20	சி26-20ம	
22	5	புத	●37-35	சதை27-28	சி27-28அ	சர்வத்திர அமாவாசை
23	6	வியா	பிர38-38	பூரட்29-48	சித்60	பால்குணசுத்தம்
24	7	வெ	துதி40-53	உத்-33-15	சி33-15அ	சந்திர தரிசனம் 4-ம் பிறைபோல் தோற்றும்
25	8	சனி	திரி44-28	ரேவ-38-3	ம38-3சித்	பிரயாணம் விலக்க
26	9	ஞா	சது49-10	அசு43-55	சித்60	லாந்த, மாச சதுர்த்தி விரதம், சர்வ முகூர்த்தம்
27	10	திங்	பஞ்54-43	பரணி50-40	சி50-40ம	அடுப்புவைக்க [ருக்
28	11	செ	சஷ்60	※கிரு58-0	சித்58-0அ	கிருத்திகை, திருதினஸ்பி
29	12	புத	சஷ்0-53	ரோ60	சித்60	திருதின ஸ்பிருத், சர்வ முகூர்த்தம்

சுக்			
சூரி கே	12உத-செ 17உகும்-புத 20உமே-சுக்		
புத			ராகு
	குரு செ	சனி	

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE “ANANDA BODHINI” POWER PRESS, 15, VENKATESA MAISTRY ST., MADRAS.

* இக்குறியுள்ளவை டெக்ஸ்ட்புக் கமிடியாரால் அங்கீகரிக்கப்பெற்றவை.

நூதன தமிழ் நாவல்களும், கதைப் புத்தகங்களும்.

ஆரணி—குப்புசாமி முதலியார் இயற்றியவை.

	ரூ.	அ.
விளையாட்டுச்சாமான் அல்லது விபரீதக்கொலை ...	1	6
பவளத்தீவு 2 பாகங்கள் ...	3	0
தபால்கொள்ளைக்காரர்கள்	0	14
இந்திராபாய் ...	2	8
அமராவதி 2-பாகங்கள் ...	4	0
மைத்சன் அறையின் மர்மம் ...	1	8
கற்கோட்டை ...	2	0
பூங்கோதை ...	0	10
வீரநாதன் ...	0	12
கனகபூஷணம் 2 பாகமும்	3	8
கமலசேகரன் ...	1	12
தினகரசுந்தரி ...	1	0
ரத்னபுரி ரகசியம் 2 பாகமும்	4	0
மதனபூஷணம் ...	1	0
சுவர்ணாம்பாள் ...	0	12
தேவசுந்தரி ...	1	4
குணசுந்தரன் ...	0	12
பத்மாலனி ...	0	14
ஆனந்தஸிங் ...	2	0
மின்சாரமாயவன் ...	1	8
குலசேகரன் ...	1	0
சுந்தர்சிங் ...	1	8
உமர் பாஷா 2 பாகமும் ...	4	12
புஷ்பவனம் ...	0	14
வரதசுந்தரம் ...	2	0
அம்புஜாக்ஷி ...	2	0
அயாஷா 2 பாகங்கள் ...	1	12
அந்தப்புரக்காதல் ...	1	4
மாண்டிகிரிஸ்டோ 2 பாகமும்	3	0
லண்டன் திருடர்கள் 2 பாகம்	2	12
இரங்கநாயகி ...	1	4
கோஹூர்ஜான் ...	0	10
இந்திராணி ...	1	4
பத்மினி ...	0	10
மதனகாந்தி ...	1	8
கமலநாதன் ...	1	8
கற்பகசுந்தரி ...	1	6

	ரூ.	அ.
மெடீரியா மெடிகா ...	8	0
அற்புத நவநீதரம்பை ...	1	0
ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும்உபதேசங்களும்	1	12
கம்பராமாயண சங்கிரகவசனம்	2	0
ராமாயண ஓடம் ஏலப்பாட்டு	0	8

	ரூ.	அ.
* சதானந்தர் ...	1	4
* ஜீவகன்வசனம் ...	1	0
* கர்ணன் சரிதை ...	0	12
* பீஷ்மவிஜயம் ...	0	10
* வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகள் ...	0	10
* கீர்த்திசிங்கன் ...	0	8
* அரிச்சந்திரன் சரிதை ...	0	8
* சகோதரவாஞ்சை ...	0	6
* நீலக்கொடி ...	0	5
* மணவாளன் ...	0	8
* பரசுராமன் ...	0	8
தசாவதாரம் ...	0	6
ஸ்ரீகிருஷ்ணன் தூது வசனம்	0	8
திருவிளையாடல் வசனம் ...	2	8
பெரியபுராண வசனம் ...	2	8
அருணாசல புராணம் உரை	1	8
கண்டிராஜா நாடகம் ...	0	12
இந்து லீகா ...	0	8
குசேலோபாக்கியான வசனம்	1	0
கண்ணன் பக்திரஸக்கீர்த்தனை	0	2
நளினசுந்தரி ...	0	10
ஜெகதலஜெகஜ்ஜோதி அச்சில்		
மதுசூதனன் ...	0	10
கனகரத்தினம் ...	0	8
மெய்க்காதலி ...	0	8
மேனுமினுக்கி கதை ...	0	8
வீணகானன்ஞானேந்திரி ...	0	8
அகட விகட விலாச விநோதம்	0	10
மனோன்மணி கதை ...	0	8
கோமளவல்லி கதை ...	0	8
விகடவல்லி கதை ...	0	4
கமலமதி ...	0	8
துயாரனன் கதை ...	0	12
காமசேன ரசிகா ...	0	8
பூர்ணவல்லி ...	0	6
பூலோக லக்ஷ்மிகதை ...	0	10
வைணவக் கொத்து ...	0	8
அனுபோக ஆரூட சிந்தாமணி	0	6
நிமித்தியகுறி சாஸ்திரம் ...	0	2
ஸ்திரீபுருஷஜாதக நிறவுகோல்	0	8
மருமக்கள் துயரம் ...	0	2
தத்வலங்கார ராமாயணம் அச்சில்		
மலையாளபகவதி ...	1	0
ஞானரத்னம் ...	0	4
பகவத்கீதா சங்கிரகம் ...	0	2

விலாசம்—ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ரஜபன்சி மாத்திரைகளும் தைலமும்.

நபும்சகர்களை தட்டி எழுப்பும் ரதி ! — சம்சாரப் பிரியர்களை காக்கும் மன்மதன் ! !

ஆதிகாலத்தில் இந்த மாத்திரைகள் பல மனைவிகளோடு கூடியிருந்த பல டில்லி பாதுஷாக்களால் மிகவும் உபயோகிக்கப்பட்டு வந்தது. இது புராதன உருது பாஷை சாஸ்திரத்தின்படி வெகு பிரயாசையுடனும், அதிக பண விரயத்துடனும், விலை உயர்ந்த மருந்து சரக்குகள், மலை மூலிகைகளோடும், நபும்சகத்வத்தை போக்குவதற்கு அதி உபயோகமான ஆண்காடி பீஜத்தின் சத்தின் தைலமும் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது.

மேற்படி மாத்திரைகள் உள்ளுக்கு சாப்பிடுவதற்கும் தைலம் மேல் பூச்சுக்காகவும், தயார் செய்யப்பட்டிருக்கிறது. இம்மாத்திரைகள், பலஹீனம், மேக சம்பந்தமான சகல வியாதிகள் ஸ்வப்னஸ்கலிதம், சீக்கிரஸ்கலிதம் முதலியவைகளை நீக்கும். முழு நபும்சகர்கள், மாத்திரை, தைலம் இரண்டும் 10 நாளைக்கு விடாமல் உபயோகிக்கவேண்டியது. இம்மாதிரி மருந்து இவ்வுலகில் இதுவரையில் வெளியாகவில்லையென்று உறுதியாய் சொல்லுவோம். இது நபும்சகர்களுக்கு திவ்ய சஞ்சீவி. ஒருமுறை உபயோகித்த பிறகுதான் இதன் குணம் விளங்கும்.

20-மாத்திரை கொண்ட புட்டி 1-க்கு ரூ. 5-0-0 } பாக்கிங், வி. பி.
1-அவுன்சு தைலம் ,, ,, ,, 5-0-0 } சார்ஜ் வேறு.

மருந்து உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு முன் பணம் அனுப்பப்படவேண்டும்.

ரஜபன்சி ஆபீஸ், நெ. 38 ஜெனரல் முத்தையாமுதலி தெருவு, மதராஸ்.

கந்த சஷ்டியும் — சுப்பிரமண்ய தத்துவமும்

உங்கள் விலாசத்தை தெரிவித்தால் இனாமாக அனுப்புகிறோம். ஸ்ரீஸ்வாமி விவேகானந்தர் இராஜயோகமும் பகவான் பதஞ்சலி மகரிஷி யோக ஸூத்ர வியாக்யானம் ஓங்கார கம்ப சக்கரம், ஸ்வாமிகளின் படமும் கூடியது விலை ரூ. 2-4-0. ஷை யோக ஸூத்ரம் (தனிமையாக) விலை ரூ. 1-4-0.

ஸ்ரீசாது இரத்தின சற்குரு புத்தகசாலை, பார்க்டவுன், (P.O.) சென்னை.

தசாவதார மகிமை.

உலகத்தில் தருமங்குறைந்து, அதருமம் தலையெடுக்கும்போது, சாது ஜனங்களை ரக்ஷிக்கவும், அசாதுக்களை சிக்ஷிக்கவும் நான் அவதாரஞ் செய்கிறேன் என்று பகவான் கீதையில் கூறியபடி, தாம் எடுத்தருளிய அவதாரங்கள் பலவற்றினும் சிறந்துள்ள "தசாவதாரங்களின் மகிமை"யை நமது நாட்டின்கண் உள்ள ஆண்மக்களும் பெண்மக்களும் நன்குணர்ந்து, நன்மை தீமைகளின் பலாபலனை ஆய்ந்தறிந்து, தெய்வ விசுவாசத்தைக் கடைப்பிடித்து, நன்னிலையடையும்பொருட்டு, படிப்பதற்கும் கேட்பதற்கும் [illegible]ரம்மியமான செந்தமிழ் நடையில் விளக்கமாக எழுதி, முத்துப் போன்ற எழுத்துக்களால் அச்சிடப்பட்டிருக்கிறது.

வித்தியாசாலை மாணவர்களுக்கும் இது பெரிதும் பயனுமாறு எழுதப்பெற்றிருக்கிறது. இதன் விலை அணா 6. தபாற்கூலி வேறு.

[illegible]	ரூ.	1	4	மெய்க்காதலி	ரூ.	0	8
[illegible]	,,	0	12	மனோன்மணி	,,	0	8
[illegible]யுள்ள ஷிர்த்து				நீலக்கொடி	,,	0	5
[illegible]ரோமணிகள்	ரூ.	0	10	ஞானரத்னம்	,,	0	4
பூர்ணவல்லி	,,	0	6	ராமாயண ஓடம் ஏலப்பாட்டு		0	3

விலாசம்:— ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

தீராத மேகரண சொறி சிரங்குகளுக்கு
சஞ்சீவி யெண்ணெ.

இந்த சஞ்சீவி எண்ணெ வன மூலிகைகளாலும், பலசரக்கு சாமான்களாலும் செய்யப்பட்டது. ஆனைச்சிரங்கு, சொறிச் சிரங்கு, வரட்டுச் சிரங்கு, தவளைச் சிரங்கு, மேகச் சூட்டினால் உண்டாகும் நமைச்சல் முதலியவைகளை சூரியனைக்கண்ட பனிபோல் நீக்கி குணப்படுத்தி விடும்.

இந்த யெண்ணெயை காலையில் கொஞ்சம் யெடுத்து சொறி, நமைச்சல், சிரங்கு உள்ள இடங்களில் தடவி பகல் 12-மணிக்கு இலுப்பைக் கட்டியாவது, சீக்காயாவது தேய்த்து குளிர்ந்த ஜலத்தில் மூன்று நாள் தடவி குளித்தால் யெவ்வித சொறி சிரங்கு நமைச்சலும் போக் கடிக்கும் ஒரு தடவை உபயோகித்தால் இதன் அருமை விளங்கும். புட்டி 1-க்கு அணா 8.

பெங்களூர் வலை பனியன்.

நமது நண்பர்கள் அனேக பனியன்களை உபயோகித்திருப்பார்கள் இந்தபடத்தில் காட்டிய பனியன் இந்தியாவில் தயார் செய்தவை ஏனெனில் இந்தியர்களுக்கு கூலி உழைக்கவும் பார்வைக்கு அழகாகவும் தினந்தோறும் தோய்ப்பதற்கும் நமது தேக சௌக்கியத்திற்காகவே வரவழைத்திருக்கிறோம் இதர பனியன்களை விட இந்த பனியனைத்தான் நமது நண்பர்கள் அனேகர் உபயோகித்து வருகிறார்கள்.

பெங்களூர் வலை பனியன் பெரியது ரூ. 1-8-0
பெங்களூர் வலை பனியன் சின்னது ரூ. 1-2-0

டவல் மப்ளர்கள்.



இவை டவல் என்னும் துணியால் அதனமா இக்கோடை காலத்திற்கு உதவும் பொருட்டு தயார் செய்யப்பட்டிருக்கிறது. மூன்று வித குணமுண்டு; என்ன வென்றால் கோட்டுக்கு மப்ளர் ஆகவும் உதவுகிறது. 2-வது தேகத்தின்மேல் போட்டுக் கொள்ள வெய்யிற் காலத்தில் அனுகூலப்படுகிறது. 3-வது கை குட்டையாகவும் உதவுகிறது. ¼ கெஜம் சதுரத்திற்கு சதுரம் குட்டை 1-க்கு அணா 12.

உயர்ந்த ஷர்ட்டுகள்.

இதைக் கைதேர்ந்த தையற்காரரால் தைத்து சீமை மோஸ்தராயும், நேடிவ் மோஸ்தராயும் தயார் செய்யப்பட்டிருக்கின்றது. கேம்ரேக் சீட்டி விலை ரூபா 2—4—0
உயர்ந்த லாங்கிலாத் ஷர்ட்டு ,, 2—4—0
டுவில் ஷர்ட்டு ரூ. 2-4-0. காகி ஷர்ட்டு ரூ, 2—8—0

விலாசம்:—தனலட்சுமி கம்பெனி,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

காந்தசக்தி வைத்திய சாஸ்திரம்.
(தமிழ்ப் பதிப்பு)

இப்புஸ்தகமானது ஐசுவரியம், ஆரோக்கியம், செல்வாக்கு ஆகிய

இவைகள் நிறைந்தன்ன போறைகளைத் திறக்க வல்லதோர் மந்திரம் போன்றது. இந்நூல், இன்ன காரியங்கள் இன்ன இன்ன காரணங்களினால் செய்ய வேண்டியதவசிய மென்றும், அவைகளை இன்ன இன்ன விதமாகச் செய்யவேண்டு மென்றும் விவரமாகத் தெரிவிக்கிறது. ஔஷதப் பிரயோக மின்றிப் பிணிகளைத் தீர்க்கும் சக்தியை யளிக்கக் கூடியது. ஒருவனை நித்திரை போன்ற மயக்க மடையச் செய்வதற்கு உரிய வழியையும், வியாதிகளையும், கெட்ட பழக்கங்களையும் பிரபோதனைகளினால் தீர்த்துக் கொள்ளக் கூடிய பல வழிகளையும் இந்நூல் தெரிவிக்கிறது; சுளுக்குகளினால் உண்டாகும் குத்துவலிகள், வயிற்று வலி, மலச்சிக்கல், தலைவலி, நரம்புக்குத்தல், பல்வலி, வாதரோகம் முதலிய பலவியாதிகளையும் காந்தசக்தியினால் ஸ்வஸ்தமாக்கலாம். புஸ்தகம், முழுதும் படங்களுடன் அடங்கியது. ரூ. 1.

ஹஸ்தரேகை சாஸ்திரம்.

மேற்குறித்த சாஸ்திரம், வித்வான்களின் உதவியைக் கொண்டு

யாவரும் தெரிந்து கொள்ளும் படியான செந்தமிழ் வசன நடையில் எழுதி சுமார் 200 படங்களுடன் அச்சிட்டு வெளிப் படுத்தப் பட்டிருக்கிறது. இப்புஸ்தகத்தை வாசிக்கும் அனைவரும் தங்களுடைய விவாஹம், ஆயுள், இல்லறச்சுகம், சந்தானம், ஐசுவரியம், தேகசௌக்கியம், தனநஷ்டம், மரணம் முதலிய பல விஷயங்களையும் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். மேலும், இது நம்மைநாமே அறிந்து நம்மிடத்திலுள்ள குறைகளை நாமே நீக்கிக் கொள்ளச் செய்து, எவ்வித புத்தி, வைபவங்களை நாம் அபிவிருத்தி செய்யவேண்டு மென்றும், எத்தொழிலை நாம் கைக்கொண்டால் மிகுந்த காரியசித்தியை அடையக் கூடுமென்றும் நமக்குத் தெரிவிக்கிறது. இம்மாதிரியான அரிய பெரிய நூல் இதுவரையில் நமது தேசத்தில் ஒருவராலும் வெளிப்படுத்தப் படவில்லை. விலை ரூபா 2 0 0

இதே புஸ்தகம் இங்கிலீஷிலும் கிடைக்கும். விலை ரூபா 1 8 0.

விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஸ்வாமி ரப்பர் ஸ்டாம்புகள் செட் நெ. 3. விலை ரூ. 1.

மேலே கண்டிருக்கும் மூர்த்திகளின் வடிவங்களைக் கடிதங்கள், கார்டுகள், கவர்கள், புஸ்தகங்கள் முதலிய எல்லாவற்றிலும் தனித்தனியாகத் தாமே அச்சிட்டுக்கொள்ளலாம். மேற்கண்ட 6 ஸ்வாமி ரப்பர் ஸ்டாம்புகளின் விலை ரூ. 1-0-0, மைபேட், பிரஷ், மை புட்டி இனும். வி. பி. தபால்சார்ஜ் வேறு. [illegible] அண்ட் [illegible], நெ-19, பஜார்ரோடு, [illegible], மதராஸ்.

புஸ்தக ஆர்டருக்கு மாத்திரம் கியாலண்டர் இனும்.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
கன்னியின் முத்தம் 4 பாகம்	5	0	அம்பாலிகை	0	12	கோமளவல்லி	0	8
உமர்பாஷா 2 பாகங்கள்	4	12	துயராளன் கதை	0	12	விகடநாதன்	0	8
இரத்தினபுரி இரகசியம் 2 பாகம்	4	0	விவேகானந்தகதை	0	12	கண்ணுமணி	0	8
அமராவதி 2 பாகம்	4	0	புதியவனத்து குழந்தை	0	10	பூலோகயின்பதுன்பம்	0	8
பவளத்தீவு 2 பாகம்	3	0	அம்பிகாபதி	0	10	மனோன்மணி	0	8
இந்திராபாய்	2	8	மாதவி	0	10	பங்கஜவல்லி	0	8
ஜடாவல்லவர்	2	8	கோஹினூர்	0	9	கோமளம் கஞ்சியாத்திரை	0	8
தனபாலன்	2	0	பதிவிரதைகள் சரித்திரம்	0	8	திருவள்ளுவர்	0	8
கனகாங்கி	2	0	பாதாளபுவனராணி	0	8	விவேகானந்தன்	0	6
வரதசுந்தரம்	2	0	கொழுத்தசிரிப்பு	0	8	உட்டாணி	0	6
சுந்தரிமனோகரன்	1	8	பாண்டவர் பாலலீலை	0	8	பாதாளவாசி	0	6
தலைவாங்கி	1	0	மதிமுகி	0	8	தாக்ஷாயணி	0	6
ஹேமலதா	1	0	விகடமோகனு	0	8	மோகனவல்லி	0	5
பத்மநாபன்	0	14	மெய்க்காதலி	0	8	இல்லறமாலிகா	0	4
பத்மலோசனி	0	12	மேனுமினுக்கி	0	8	அலாவுடீன்	0	3
சரித்திரசுந்தரிகை	0	12				மல்லிகா	0	2
						மூன்று பூதங்கள்	0	2

வடுவூர். துரைசாமி அய்யங்கார் (படங்களுடையது.)

காளிங்கராயன் கோட்டை 2 பாகமும்.	...	ரூபா	4	0	0			
பூர்ணசந்திரோதயம் 2 பாகமும்	...	,,	3	8	0			
பாலாமணி 2 பாகம்	ரூ. 2	8	திகம்பர சாமியார்	ரூ.	8	0		
மேனகா 2-ம் பாகம்	,, 3	0	மதன கல்யாணி 3 பாகம்	,,	4	8		
கனகாம்புஜம் 2-பாகம்	,, 2	12	சௌந்தர்ய கோகிலம்	,,	1	8		
வசந்தமல்லிகா	,, 1	8	மங்கையர்பகட்டு	,,	0	12		

1 ரூபாய்க்கு குறைந்த ஆர்டர்களை வி-பி-யில் அனுப்பிவைக்க முடியாது.

விலாசம் :—டி. சீதாராம் முதலியார்,
நெ. 3. கணபதிமுதலி தெருவு, திருவல்லிக்கேணி, சென்னை.

புத்திர சந்தான எண்ணை.

ஆண்மலடு சொன்னாலும் சொல்லலாகும்
அப்பனே பெண்மலடு யாருமில்லை
என்மலடாய்ப் போவதென்று கேட்பாயாகில்
இயம்புவேன் கருக்குழியில்சோரை சேர்ந்தால்
ஊன்மிகுத்தால்புழுதரித்தால் உதிரங்கெட்டால்
ஓங்கார பிரணவத்தில் வாய்வு சேர்ந்தால்
தான்மதத்து விபரீதச் சேர்க்கை செய்தால்
தலையாட்டிப்பேய்பிணியால் தரியாதென்னே.

இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு சாப்பிடவும் இப்படி 15 நாள் சாப்பிட்டால் கருக்குழியிலிருக்கும் குற்றங்களையும்நீக்கி கர்ப்பந்தரிக்கும். சிலருக்கு 2, 3, 4 மாதங்கள் கருதரித்து உடைந்து போவதுண்டு. இப்பேர்க்கொத்த கர்ப்ப தோஷமெல்லாம் நீங்கி கருதரிக்கும். இதன் விலை புட்டி 1-க்கு விலை ரூ. 2 0 0.

சி. வி. கோவிந்தராஜ முதலியார் & சன்ஸ்,
28, வெங்கடேச மேஸ்திரிவீதி, மதராஸ்.

கர்ணன் சரிதை அணா 12

அரிச்சந்திரன் சரிதை.

'சத்தியமே ஜயம்' என்பதோர் பழமொழி. இதனை அரிச்சந்திரன் சரிதை நன்கு வலியுறுத்தும். அம்மன்னவன் தன் வாய்மையை நிலைநிறுத்தத் தன் நாடு நகரமனைத்தையு மிழந்தான். தன் மனைவியையும் மகனையும் விற்றான். அவனும் ஓர் புலையனுக் கடிமையாயினான். இம்மட்டோ! விசுவாமித்திர முனிவரியற்றிய கொடுமைகளெல்லாவற்றையும் மிக்க பொறுமையோடு ஏற்றுக்கொண்டான். சுருங்கச்சொன்னால், வாய்மையில் இவனுக்கு நிகரானவர் வேறெவருமிலர் என்பது திண்ணம். அம்மன்னவன் புகழ் இன்றளவும் குன்றின்மேலிட்ட விளக்கைப்போல் விளங்குவதற்குக் காரணம் அவன் வாய்மையேயாம். விலை அணா எட்டு.

ஸ்ரீமத் சம்பூர்ண இராமாயணம்	ரூபா	1	4	0
அருந்தவ துருவ சரித்திரம்	,,	0	8	0

இப் புஸ்தகங்கள் D. V. ஸ்ரீனிவாசய்யங்காரவர்களாலியற்றப்பெற்று, நாடகமேடைகளுக்குத் திலகமாய்விளங்கிய காலஞ்சென்ற C. S. கல்யாணராமய்யரவர்களால் தமது கம்பெனியில் நடத்தப்பெற்று யாவராலும் நன்கு மதிக்கும் புகழுரையும் பெற்றுள்ளன. ஸமஸ்கிருத ஸ்லோகங்கள், விருத்தங்கள், கர்னாடக, இந்துஸ்தான், பார்சி, கீர்த்தனை, ஜாவளி முதலிய வர்ணமெட்டுகளமைந்த பாட்டுகளுடனும், வசன நடையுடனும் முடிந்துள்ளன.

விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

சம்சார சுகத்திற்கு திவ்ய ஔஷதம்.

பீஜ்பந்த்

இரண்டு மணி நேரத்தில் அபூர்வ குணம்.

இந்த மருந்து இராத்திரி வேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீற்றுப்போயிருந்தாலும் அதை இரண்டு மணி நேரத்திற்குள் தவறாமல் கட்டுபடுத்தி அதிகமான ரதிசக்தியைக் கொடுக்கும். 3 நாள் 2 வேளையும் சாப்பிட்டால், ஸ்வப்பன ஸ்கலிதம், சீக்கிரஸ்கலிதம் முதலியதை நீக்கும். பதினைந்து நாள் 2 வேளையும் சாப்பிட்டால் துர்ப்யாசங்களினால் உண்டாகும் நபும்சகத்வம்போக்கி, அதிகமான யௌவனசக்தியையும், நரம்புகளுக்கு பலத்தையும், சம்சார சுகத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதன் குணத்தை இன்னும் வெளிப்படையாய் எழுதுவதற்கு சென்னை கவர்ன்மெண்டார் அனுமதிக்கவில்லையாகையால், இத்துடன் சுருக்கிவிட்டோம். ஒருமுறை தருவித்து உபயோகித்தபிறகுதான் இதன் குணம் விளங்கும். மருந்து உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். கடிதங்களை ரகஸ்யமாய் வைக்கப்படும். 20 மாத்திரைகள் ஸீசா 1-க்கு ரூ. 2. வி.பி.சார்ஜ்வேறு சிங்கப்பூர், பினாங்கு முதலியவெளிநாடுகளுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும்.

ஆரிய வைத்திய ஆஸ்ரமம்,
நெ. 38, பைராகிமடம் கோவில் வீதி, ஜீ. டி. மதராஸ்.

G. W. M. REYNOLDS'

BIG TYPE EDITIONS.

MYSTERIES OF THE COURT OF LONDON

The most interesting and unrivalled Novel in English in 17 Vols. containing fluent description of sensational plots, amazing and spell-binding incidents full of gripping interest introducing many types of humanities in their comic, tragic, adventurous, detective and villainous acts.

Written by the same author and published in 17 monthly Volumes from August 1922. Sixteen Volumes are ready now and the 17th Vol. will be issued in January 1924.

Printed on glazed paper; Royal Octavo Size. Price Per Vol. Re. 1. Postage as. 7 extra.

Orders are registered **now** as only a limited number of copies can be printed.

		R.	A.
1.	Ellen Percy or the Memoirs of an Actress 8 vols.	6	0
2.	Mary Price 8 vols.	6	0
3.	Joseph Wilmot 8 vols	5	0
4.	The Bronze Statue or the Virgin's Kiss 4 vols.	3	0
5.	Lovers of the Harem or a Tale of Constantinople 4 vols.	3	0
6.	Rosa Lambert or the Memoirs of a Clergyman's daughter 4 vols.	3	0
7.	The Young Duchess or the Memoirs of a lady of Quality 4 vols.	3	0
8.	Margaret or the Discarded Queen 4 vols.	3	0
9.	The Massacre of Glencoe. 4 vols.	3	0
10.	The Mysteries of Old London. 3 vols.	2	4
11.	Canonbury House or the Queen's Prophecy 3 vols.	2	4
12.	Pope Joan or the female Pontiff 3 vols.	1	12
13.	The Soldier's Wife. 2 vols.	1	8
14.	Leila or the Star of Mingrelia 2 vols.	1	8
15.	Robert Macaire or the French Bandit in England 2 vols. ...	1	4
16.	Grace Darling or the Heroine of the Fern island.	0	12
17.	The Young Fisherman or the Spirits of the Lake and the Baroness of Grand Manor	0	14
18.	Kenneth. 4 vols.	3	0
19.	Empress Eugene's Boudoir. 3 vols.	2	0
20.	Master Timothy's Book Case. (complete)	1	12
21.	May Middleton Complete	1	8
22.	Mary Stuart Complete	1	4
23.	The Seamstress Complete	1	0
24.	Necromancer. 3 vols.	2	4
24.	Omar 4 vols. ...	3	0
25.	The Wagner. 2 vols. ...	1	12
26.	Coral Island. 4 vols. ...	3	0
	MYSTERIES OF PARIS BY EUGENE SUE. 2 vols.	1	0

இரவில் மணிபார்க்கும் ரிஸ்ட்லெட் கெடியாரம்.

இது வெகு அழகும் உருதியுமுள்ள சேர்த்தியான கெடியாரம். மணிபார்க்கும் எண்களிலும், முள்களிலும் 'ரேடியம்' பதித்து இருப்பதால் இரவில் சலபமாய் மணிபார்க்கலாம்.

நிக்கல் ரிஸ்ட்லெட் 8 மூலே கெடியாரம் தோல் பட்டையுடன்	ரூ.	8—0—0
ஷை 4 ஷை ஷை	,,	8—0—0
ரேடியம் இல்லாத சாதா ரிஸ்ட்லெட் ஷை	,,	5—8—0

Apply to:—**THE SUPERIOR WATCH CO.,**
P. O. Box No. 167, (A. B.) MADRAS, E.

மயாத சிங்க பலத்தைத் தருவதெது ?

முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும், தேகபலத்தைத் தரும் ஔடதம் வேறொன்றுமில்லை.

விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே !

இந்த லேகிய செந்தூரமானது சாமான்யமானதன்று, அபாரமான தத்துவத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளது. உறுதியாய் இதை நம்பி வாங்கி சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே எமது மருந்தின் விசேட குணம் நன்கு விளங்கும்.

நாராயண சஞ்சீவி தைலம்.

இத்தைலம் முழுவதும் பச்சிலைகளாலும் பசும்பால் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்களாலும் ஆயுர்வேத முறைப்படி மிகபரிசுத்தமாக தயார் செய்யப்பட்டது. இத்தைலத்தில் ஸ்நானம் செய்வதினால் தலைவலி ஒற்றைதலைவலி, மண்டையிடி, மண்டைகுத்தல் கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், சாலேஸ்வரம், காது நோய், தலைபாரம், அதிக வெய்யிலினால் உண்டாகும் சிரரோகங்கள், சரீரதாபம் மூளைக் கொதிப்பு முதலியவைகளை ஆச்சரியப்படும் விதமாய் கண்டிக்கும்

தொடர்ச்சியாய் செய்துவரும் ஸ்நானங்களினால் நரைத்தமயிர் கருத்துவிடும் மூளையைக் குளிரப்பண்ணி அறிவையும் திடச்சித்தத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவதில் நிகரற்றது. சாராயசத்து முதலிய ஆங்கில வாசனைகள் ஒன்றும் சேராமல் சுத்தமான இலை கிழங்கு புல் முதலிய இந்திய வாசனையினால் பரிமளிப்பது. தினம் தலையில் தடவி வாரி வருவதினால் மயிர்கருப்புப் பட்டைப்போல் பளபளப்பாக கருத்து ஆலம்விழுதைப்போல் நீண்டுவளருவதோடு உஷ்ணத்தை தணித்து அபாரமான ஞாபகசக்தியை உண்டுபண்ணி முகவசீகரத்தை உண்டாக்கும். அதிக கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களும் வெகு தூரம் வழி நடந்தவர்களும் படுக்கும்போது சிறிது தைலத்தை உள்ளங்கை உள்ளங்கால்களில் தேய்த்துக்கொண்டால் கஷ்டங்கள் எல்லாம் நீங்கி காலையில் எழுந்திருக்கும்போது தேகம் வெகு ஆரோக்கியமாய் இருக்கும்.

5-பலம் டின் 1-க்கு ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

18745

ஜி. கியூர் வெள்ளை என்னும் கள்ள நோயை 3-தினத்தில் குணப்படுத்தும் மருந்து.

18745

பல மாதரிடத்தும் வேசியரிடத்தும், பிணியாளரோடும் சம்பந்தப் படுவதினாலும், ஓயாத சிற்றின்ப வனுபோகத்தாலும் மூலத்தில் அக்கினி கொண்டு தாதுகெட்டு பிரமியங்கள் நீரடைப்பு, சதை யடைப்பு, வெள்ளை, வெட்டை, கிரந்தி, சூலை, அரையாப்பு, பவுத்திர முதலியவைகள் உண்டாகின்றன. அவைகளில் முக்கியமாகிய ரத்தப்பிரமியம், நீர்கடுப்பு, நீர்தாரை யெரிவு, வெள்ளை, வெட்டை இவைகளுக்கு இதுவே மிகவும் அனுபோகமான மருந்து என்பது உண்மை பேதி முதலிய கெட்டகுணங்கள் கிடையாது. பத்தியமில்லை. உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும். புட்டி 1-க்கு ரூபா 1—0—0.

பிளாக் பர்ட் பௌண்டன் பேனா.

4—0—0

பெயர்பெற்ற ஸ்வான் [பேனா] செய்யும் மேபி டாட் கம்பெனியாரால் [செய்]யப்பட்ட நம்பிக்கையுள்ள [உயர்]ந்த மாதிரி பிளாக் பர்ட் பேனா.

விலாசம்:- தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

சோடா வாட்டர் பவுடர்.

வயிற்று நோயிருப்பவர்களுக்கும் ஜீரணசக்தி யில்லாதவர்களுக்கும் இது நல்லது. ஒரு ஆழாக்கு ஜலத்தில் 3-சிட்டிகை சோடாவாட்டர் பவுடர் போட்டால் பொசபொசவென்று பொங்கும். உடனே சாப்பிடவும் ஏப்பம் வரும். உடனே வயிற்றுநோயை நிறுத்தும். புட்டி 1-க்கு அணா 0 6 0.

யூகலிப்டஸ் ஆயில்

(சுத்தமான நீலகிரித் தைலம்.)

வைத்தியத்தில் தேர்ந்த ஒரு அநுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக் வியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வகையறா வெட்டு காயங்கள், நரம்பு சுளுக்குகள், தீப் புண்கள், வெந்நீர்பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன ரணங்கள், இன்புளூவென்ஸா, மலேரியா, சகலவித சுரங்கள், இருமல், கக்குவா இருமல், வாய்வு, பிடிப்பு, குடைச்சல், வாய்வினால் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி முதலிய நோய்களுக்குக் கைகண்ட ஔஷதம்.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணா 4

1 ,, 1-டஜன் (12) ரூ. 2 8 0

நரைமயிர் கருக்குந் தைலம்.

தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும் பசுமைநிறமாகவும் சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3-நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன் இருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டுபண்ணும். மேலே கூறியுள்ள விகாரகுணங்கள் இதில் கிடையாது. இதைப் பூசிய பிறகு முகலட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இது உண்மை. இதைப்போன்ற தைலம் வேறெங்கும் கிடையாது. வேறு எந்த விதமான கெட்ட குணங்களும் இதில் இல்லை, இந்த அருமையான தைலத்திற்கு கிடைத்திருக்கும் கனவான்களுடைய சர்ட்டிபிகேட்டை கணக்கிட முடியாது. இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு வைத்து வரும் ரூ. 1.

கூந்தல் வளரும் துளிகள்.

இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெயில்கலந்து பிரதிதினம் மயிருக்குப் பூசிவந்தால் கூந்தலானது ஆலம்விழுதுபோல் உண்மையாய் வளரும். பேன் சேராது, சுணங்கு உண்டாகாது, மயிர் உதிராது, வழுக்கையான இடத்திலும் மயிர் முளைக்கும்.

புட்டி 1-க்கு அணா 12.

விலாசம்:- தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

கண்நோய் மருந்து.

கண் நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பீளைகட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும் மாணாக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் வெகு சிறந்த ஔஷதம். இதை உபயோகித்தால் கண்ணாடி போட வேண்டியதில்லை.

புட்டி 1-க்கு அணா 8.

கர்ணபிந்து.

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளாதிருத்தல், காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தை 2-துளி காலை மாலைகளில் விட்டுவர காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்.

புட்டி 1-க்கு அணா 4.

வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

சர்வபடை சம்மாரன்.

சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய துடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்தி சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டு பண்ணும் படைகள் ஒரே தடவையில் இந்த சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும்.

புட்டி 1-க்கு அணா 4.

ஒட்டோலீலா.

எப்போதும் நீங்காத மனோல்லாசத்தை உண்டாக்குவதில் இந்த வாசனைத் திரவியம் மிகவும் சிறந்தது. எல்லோருடைய மனதை பிரமிக்கச் செய்து ஆனந்தத்தையும் இன்பத்தையும் தந்து இதற்கு நிகரான சுகந்த மணமுடைய செண்ட் வேறொன்றுமில்லையென்று ஒவ்வொருவரும் எண்ணும்படிச் செய்யவல்லது. இதில் ஆல்கஹால் சாராயம் முதலியவைகளின் சம்பந்தமே கிடையாது இந்த நீங்காத வாசனையை உங்களுடைய கைகுட்டையிலாவது சொக்காய்களின் புறங்களிலாவது சிலதுளிகள் தடவிக்கொண்டால் சிறந்த பல புஷ்ப ஜாதிகளின் வாசனை கமழும். ஓர் நந்தவனத்தின் மத்தியில் நீங்கள் இருந்தால், அங்கு நின்றும் உண்டாகும் சுகந்த மணத்தை எவ்வாறு அனுபவித்துச் சுகிப்பீர்களோ அதினினும் பதின்மடங்கு சுகத்தை இந்த அத்தர்களால் மகிழ்வீர்களென்பது திண்ணம். கிரயம் புட்டி 1க்கு அணா 10.



ஷை பெரிய புட்டி 1-க்கு ரூபா 1.

மயிர் போக்கும் சூரணம்.

இதில் கொஞ்சமெடுத்துத் தண்ணீரில் குழைத்து உரோமமுள்ள விடத்தில் பூசி ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு ஒரு கடுதாசி கார்டினாலாவது, ஓலை நறுக்கினாலாவது வழித்தால் மேற்படி மருந்து தடவிய விடத்திலுள்ள உரோமங்கள் முழுதும் இலகுவாய் நீங்கி மழமழப்பாகிவிடும், வேக்காடு எரிச்சல் முதலாகிய உபத்திரவங்கள் உண்டாகாது. புட்டி 1-க்கு அணா 8.

விலாசம்:- தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதிராஸ்.